மலர்-5 இதழ்-106 ஜனவரி 16-31 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்




## மூலவரின் சக்தியை கொண்ட உற்சவர்

## முருகனால் வணிக மையமான பாரிமுனை

# கந்த கோட்டம் முருகன்

# ஆறுவகையான சம்சார துன்பங்களை போக்கும் எளிய மந்திரம்



ஆறு வகையான துன்பங்கள் நிறைந்தது இந்த ஸம்ஸாரம்:

1.ஆர்த்தி, அதாவது யாரிடமும் சொல்ல முடியாத துக்கம்.

2.கலக்கம், அதாவது வந்து விடுமோ என்ற பயம்.

3.கோரமான வியாதி.

4.செய்த பாவங்கள் மூலமாக வரும் கஷ்டங்கள்.

5.விபத்து.

6.முதுமை.

இதற்குப் பரிகாரமாக,

"ஆர்த்தா விஷண்ணாஸ் ஸிதிலாஸ்ச பீஜா:
கோரேஷு வியாதிஷு வர்த்தமானா:
ஸங்கீர்த்ய நாராயண ஸப்த மாத்ரம்
விமுக்த துக்காஸ் ஸுகினோ பவந்து".

இந்த ஸ்லோகத்தை 16 முறை கூறினால் மேற்கண்ட துன்பங்களின் விரியம் குறையும்.

# சாபம் கொடுத்தால் வம்ச பாவம் சேரும்

யாரையும் எந்த சூழ்நிலையிலும் சபிக்கா தீர்கள் முடிந்த வரை மனதாற வாழ்த்துங்கள்...

இல்லையேல் அவ்விடத்தில் இருந்து விலகி கொள்ளுங்கள் உங்களது சாபத்தால் இப் போது வேதனை அவன் அனுபவிக்கலாம் பாதிக்கப் பட்டவனுடைய வேதனை உன் கர்மவினையில் சேர்க்கப்படும் அதன் பிரதிபலனை பதினாறு மடங்கு அதிகமாக உன் தலைமுறையே சுமக்க வேண்டிய அவசியம் உள்ளது....



# கடிகாரம் கட்டும் பரமகல்யாணி அம்மன்



திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் குறிச்சி அருகே உள்ள சிவசைலம் பரமகல்யாணி உடனுறை சிவசைலநாதர் திருக்கோயிலில் அம்பி கைக்கு அலங்காரத்தில் இடது கையில் தங்க கடிகாரம் சார்த்துவர். இது எங்கும் இல்லாத சிறப்பு ஆகும்

# கர்மவினைகள் குறைய மகான் சமாதிகளை வணங்குங்கள்

மனிதர்களின் பாவத்தை மனிதர்கள்தான் சுமக்க வேண்டும் என்பது விதி, ஆனால் அந்த விதியை மதியால் வெல்லலாம் என்பது ஆன்றோர் வாக்கு, அதற்காகத்தான் கோவிலுக்கு செல்லுதல், மகான்களை சந்தித்தல் போன்ற செயலை செய்ய வேண்டும்.

முக்கியமாக மகான்களின் ஜிவ சமாதியில் பிரார்த்தனை செய்தால் பலன் அதிகம் கிடைக் கும். பாவ புண்ணியங்களை மகான்கள் மாற்று வது இல்லை என்பது உண்மைதான். ஆனால் நாம் வினையை அனுபவிக்கும் முறையை மாற்று கிறார்கள்.

இதை ஒரு எடுத்துக்காட்டுடன் பார்ப்போம்...

ஒருவர் ஆறாயிரம் ரூபாய்க்கு சில்லறை நாணயங்களாக வைத்திருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அது ஒரு மூட்டை மாதிரி இருக்கும், அதை சுமப்பது கையாள்வது எல்லாமே கஷ்டம். அவர் படுகிற பாட்டைப் பார்த்து விட்டு ஒருவர் சில்லறையைத் தாம் வாங்கிக் கொண்டு, புது இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளாக 3–ஐ தருகிறார்.



இப்போதும் அதே ஆறாயிரம் தான் இருக்கிறது. ஆனால் சுமை தெரியவில்லை... பாரம் குறைந்து விட்டது. இதைத்தான் மகான்கள் செய்கிறார்கள்.

கர்மவினை நம்மிடம் தான் உள்ளது அனால் நாம் கஷ்டப்படாத படி நம் மனோ நிலையை ஞானிகள் மாற்றி.. நமது ஆத்ம சக்தியை பலப் படுத்தி விடுகிறார்கள்!!!

கோவிலுக்கு செல்வதைப்போன்று மகான் களின் ஜீவ சமாதியையும் அவசியம் வழிபட வேண்டும்.

# ரெங்கநாதன் பெயரின் சிறப்பு



சென்னையில் தற்போது மிகப் பிரசித்தி பெற்ற இடம் ரெங்கநாதன் தெரு.

இந்த தெருவிற்கு இந்த பெயர் வரக்காரணம்... மிகுந்த சுவாரஸ்யமானதாகும், தன்னலமில்லாத ஒரு பக்தர் அந்த இடத்திற்கு சூட்டிய பெயர்தான் ரெங்க நாதன் என்ற பெயர். 1920ம் வருடம், சென்னையில் புதிய வீட்டு மனை பிரிவுகள் தி–நகர் பகுதியில் ஆரம்பித்த போது இந்த தெருவில் முதலில் மனை வாங்கி வீடு கட்டிய ஒரு ஓய்வு பெற்ற அரசு அதிகாரி "துப்புல் ரங்கஸ்வாமி ஐயங்கார்" ஆவார்.

அன்றைய சென்னை கார்பரேசன் அதிகாரிகள் யார் முதலில் வீடு கட்டுகிறார்களோ அவரது பெயரை வைப்பார்கள்... அதற்காக துப்புல் ரங்கஸ்வாமி ஐயங்காரை அணுகியபோது, தனது பெயருக்கு பதில் தான் தினமும் போற்றி வணங்கும் ஸ்ரீரங்கம் ரெங்கநாதன் பெயரை வையுங்கள் என்று எழுதி கொடுத்ததால் இன்று அந்த இடம் மிகப்பெரிய வணிக வளாகமாகவும், சென்னையின் முக்கிய இடமாகவும் மாறியுள்ளது.

# மீன்கள் வடிவில் காட்சியளிக்கும் அறப்பளீஸ்வரர்

**குழந்தை பாக்கியம், கல்வியில் சிறந்து விளங்க, குடும்பப்பிரச்சனையால் பெற்றோரைப் பிரிந்தவர்கள், தாய், மகன் இடையே மனக்கசப்பு உள்ளவர்கள் தங்களது பிரச்சனையை தீர்த்துக் கொள்ள உதவும் ஈசன்தான் அறப்பளீஸ்வரர்.**

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் அறப்பளீஸ்வரர் திருக்கோவில் இந்த ஈசன் அருள்புரிகிறார்.

இத்தலத்து ஈசனை வேண்டிக்கொள்ள மேற் கண்ட பிரச்சனைகள் தீரும் என்பது நம்பிக்கை. நீதி கிடைக்க இங்கு வேண்டிக்கொள்கிறார்கள். சுவாமி அம்பாளுக்கு அபிஷேகம் செய்து, வஸ்திரம் அணிவித்தும், நேர்த்திக் கடன் நிறைவேற்றுகிறார்கள்.

சங்ககாலத்தில் கொல்லி மலையான துசதுரகிரி என் றும் அறமலை என்றும் அழைக்கப்பட்டது.

அம்பலவாண கவிராயர் இத்தலத்து இறைவன் மீது அறப்பளீஸ்வரர் சதகம் என்ற நூலை இயற்றியுள்ளார். திருஞானசம்பந்தரும், திருநாவுக் கரசரும் தங்களது தேவாரப் பாடல்களில் கொல்லிமலை பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

இயற்கை வளம் மிக்க கொல்லிமலையானது வல்வில்ஓரி என்னும் மன்னன் ஆண்ட பகுதி யாகும். காலாங்கி முனிவர் முதலாக பதினெண் சித்தர்கள் இம்மலையில் பல குகைகளில் தங்கித் தவம் செய்துள்ளனர். அறைப்பள்ளி என்பது மலைமேல் உள்ள கோவில் என்ற பொருளாகும்.

இக்கோவிலுக்குப் பக்கத்தில் மீன்பள்ளி என்ற ஆறு ஓடுகிறது. இம்மீன்பள்ளியாற்றில், இறைவன் மீன்களின் வடிவில் இருப்பதாக நம்பப் படுகிறது. எனவே மீன்களுக்கு பழம், தேங்காய் வைத்துப் படைத்து, அவற்றுக்கு உணவு தரும் பழக்கம் பண்டை நாளில் இருந்து வந்துள்ளது. இதன்பின்னரே அறைப்பள்ளிநாதருக்கு பூஜை நிகழ்கிறது.



இக்கோவிலின் மேற்கு பகுதியில் கொல்லிப் பாவை என்னும் தெய்வ சக்தி வாய்ந்த பதுமை ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

சிந்தாமணி, குறுந்தொகை, சிலப்பதிகாரம், நற்றிணை மற்றும் புறநானு}று ஆகியவை வாயிலாக இப்பாவையின் சிறப்புக்களை குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்த கொல்லிப்பாவையால் இம்மலை காக்கப்படுவதால், இம்மலைக்கு கொல்லிமலை எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. கொல்லிப்பாவையை இம்மலை வாழ்மக்கள் எட்டுக்கை அம்மன் என்று கூறுகின்றனர்.

இக்கோவிலில் சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். சிவலிங்கத்தின் உச்சியில் கலப்பை மோதியதால் ஏற்பட்ட தழும்பு காணப்படுகிறது. ஒரே இடத்தில் நின்று, ஒரே நேரத்தில் அறப்பளீஸ்வரர், தாயம்மை, விநாயகர், முருகன் ஆகிய நான்கு தெய்வங்களையும் ஒரு சேர தரிசித்து மகிழும் அரிய அமைப்பு இக்கோவிலின் தனிச்சிறப்பாகும்.

அறம்வளர்த்தநாயகி சன்னதி முன்மண்டபத் தின் மேற்பகுதியில் அஷ்ட லட்சுமிகளுடன் கூடிய ஸ்ரீசக்ர யந்திரம் உள்ளது. இதன் கீழே நின்று வழிபட லட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

சுற்றுப்பிரகாரத்தில், வள்ளி, தேவசேனாவுடன் முருகனும், விநாயகர், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, லட்சுமி, சரஸ்வதி, தட்சிணா மூர்த்தி, சண்டிகேஸ்வரர், துர்க்கை, கால பைரவர், சூரியன், சந்திரன் ஆகியோர் எழுந் தருளியுள்ளனர். இயற்கை அன்னையின் அழகை ஒட்டு மொத்த குத்தகைக்கு எடுத்து கொண்ட மலை அழகிகளில் கொல்லிமலை சிறப்பு பெற்றது. தன் அழகை 17 மைல் தூரத்திற்கு விரித்திருக்கும் இந்த மலை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முந்தைய பழமையும், சிறப்பும் உடையது.



# சென்னையின் உண்மை பெயர் ஸ்ரீரங்கப்பட்டினம்



சென்னியப்ப நாயக்கன் பட்டணம் பேச்சி வழக்கில் உருமாறி சென்னைப் பட்டிணம் என்று ஆனது, ஆனால் சென்னைப் பட்டினம் என்ற பெயர் வருவதற்கு முன்பு சென்னைக்கு பெயர் வைக்க விஜயநகர் ராஜா எழுதி கொடுத்த பெயர் ஸ்ரீரங்கப்பட்டிணம் என்ற பெயராகும், அரங்க நாதன் மீது மிகுந்த பக்தி கொண்ட விஜயநகர் ராஜா தற்போதைய சென்னைக்கு ஸ்ரீரங்கப்பட்டிணம் என்ற பெயரை சூட்ட ஓலை கொடுத்தனுப்பியபோது, அதை எடுத்து வந்த மண்டல அதிகாரி, அவரின் தந்தையின் பெயரான சென்னியப்ப நாயக்கன் என்ற பெயரை மாற்றி எழுதி கொடுத்தான்.

விஜயநகர ராஜாதான் இந்தப் பெயரை கொடுத்ததாக எண்ணி சென்னியப்ப நாயக்கன் பெயரையே சூட்டினர்.

நாட்கள் செல்ல செல்ல சென்னியப்ப நாயக்கன் என்ற பெயர் மருவி சென்னைப் என்று உருமாறி சென்னைப் பட்டிணம் என்ற பெயர் நிலைத்துவிட்டது.

அந்த மண்டல அதிகாரி செய்த உள்ளடி வேலையால் ஸ்ரீரங்கப்பட்டிணம் என்று வரவேண்டிய பெயர் மாறி சென்னைப்பட்டினம் என்று தற்போது விளங்குகிறது.

www.aanmeegamalar.com









www.aanmeegamalar.com

ஸ்ரீரங்கம், காசி, குருச்சேத்திரம், பிருகுசேத்திரம், பிரபாச தீர்த்தம், காஞ்சி, திரி புஷ்கரம் மற்றும் புதேஸ்வரம் ஆகிய புண்ணிய ஸ்தலங்களில் இறப்பவர்களுக்கு மோட்சம் கிடைப்பது உறுதியாகும்.

வடமதுரை, காசி, அயோத்தி, மாயாபுரி, காஞ்சி, அவந்திகா மற்றும் துவாரகை போன்ற ஸ்தலங்களில் ஏதாவது ஒன்றில் இறப்பாராயின் அவர் வைகுண்டத்தை வந்தடைவார்.

சன்னியாச ஆசிரமத்தை அமைத்து அதை ஒழுக்கத்துடன் கடைபிடிப்பவர்களும், இறை பக்தி கொண்டவர்களும், உயிர் அவர் உடலிலிருந்து பிரியும் பொழுதும் இறை நாமங்களை உச்சரித்து கொண்டிருப்பவர்களும் பேரின்ப வீட்டை அடைவார்கள்.

துளசியை பயிர் செய்து கோவிலுக்கு கொடுப்பவர் மற்றும் துளசிக்கு நீர் பாய்ச்சுகின்றவர்களின் பாவங்கள் யாவும் நீங்கி மேலோ கத்தில் மகிழ்ச்சியாக இருப்பர்.

பசு, குழந்தைகள், பெண்கள் மற்றும் வேதம் உணர்ந்த, அறிவில் சிறந்த சான்றோர்கள் ஆகியோரை ஆபத்து ஏற்படும் காலங் களில் தன்னை பற்றி கவலைப்படாமல் சுயநல நோக்கம் எதுவும் இல்லாமல் அவர்களை காப்பாற்றக்கூடியவர்கள் இறுதியில் சொர்க்கலோகத்தில் தேவர்களால் வரவேற்கப்பட்டு இன்பமாக இருப்பார்கள்.

பசு, ஆடை மற்றும் நிலம் ஆகியவற்றை தானம் கொடுப்பவர்களும், கிணறு மற்றும் குளம் போன்ற நீர் நிலையங்களை பழுது பார்த்தவர்களும், பொது பயன்பாட்டிற்கு ஏற்படுத்தியவர்களும், கோவில்கள் எழுப்பியவர்களும் அதில் உள்ள பழுதுகளை நீக்கி புதுப்பித்தவர்களும் புண்ணியம் செய்தவர்கள் ஆவார்கள். இவர்கள் செய்த இந்த செயலினால் உருவான புண்ணியத்தால் விஷ்ணு லோகத்தை அடைந்து மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

காளை கன்றினை தானம் செய்தவரும், தர்ப்பை புல்லால் வீடு கட்டி, மனை தானம் கொடுத்த வர்களும், விருஷோற்சர்க்கம் செய்தவர்களும் சொர்க்கத்தை அடைவார்கள் என்று ஸ்ரீமந்நாராயணன் கருட புராணத்தில் கூறியுள்ளார்.




# என்ன கர்மங்கள் செய்தால் புண்ணிய லோகத்தை அடைய இயலும்?

www.aanmeegamalar.com




எந்த விதமான கட்டணமும் இல்லை

தரத்தில் முதலிடம்

முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்

இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com

# திருமணத்தடை, குடும்ப பிரச்சனை, சண்டை சச்சரவுகளை தீர்க்கும்

# திருப்புகழ் மந்திரம்

திருமணத்தடையை போக்கும், கணவன் மனைவி பிரச்சனையை தீர்க்கும், அருணகிரிநாதர் அருளிய, சக்திவாய்ந்த மந்திரம்

திருமணம் ஆகாமல் இருப்பது ஒரு பிரச்சனை என்றால், திருமணமான பின்பு, கணவன் மனைவி ஒற்றுமை இல்லை என்பது பெரும் பிரச்சனையாக இருக்கின்றது.

ஆகவே, திருமணத்தடையை நீக்குவதற்கும், வீட்டில் சண்டை சச்சரவு இல்லாத நிம்மதியான வாழ்க்கை நிளவுவதற்கும், அருணகிரிநாதர் அருளிய, திருப்புகழை முருகப் பெருமானை நினைத்து, காலையில் எழுந்து, உங்கள் வீட்டு பூஜை அறையில் ஒரு நெய் தீபத்தை ஏற்றி வைத்து, இந்த மந்திரத்தை உச்சரித்தால் போதும்.

திருமணம் ஆகாத தங்களுடைய குழந்தை களுக்காக, பெற்றோர்களும் இந்த மந்திரத்தை உச்சரித்து, தங்களுடைய பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளலாம்.

திருமணம் ஆன கணவன் மனைவி இருவருக் கும் பிரச்சினை, சண்டை சச்சரவுகள் என்று குடும்பத்தில் வந்து கொண்டே இருந்தால், அவர வரே இந்த மந்திரத்தை, அவரவர் வாயினால் உச்சரித்து மனதார, மனமுருகி வேண்டிக் கொள்ளும் பட்சத்தில் நிச்சயம் கை மேல் பலன் உண்டு. பிரிந்த தம்பதியினர், மீண்டும் ஒன்று சேர வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் கூட, தாராளமாக இந்த மந்திரத்தை உச்சரிக்க, கைமேல் பலன் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மந்திரத்தை தொடர்ந்து 48 நாட்கள், 6 முறை உச்சரிக்க வேண்டும். ஜாதக தோஷத்தின் மூலம் திருமணம் ஆகாதவர்களுக்கு கூட, அந்த தோஷத்தினால், ஏற்படக்கூடிய தாக்கத்தை குறைக்க கூடிய சக்தி, இந்த மந்திரத்திற்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது. உங்களுக்காக அருணகிரிநாதர் அருளிய திருப் புகழ் பாடல் இதோ!

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து – வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் – வசைகூற

★★★




குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப ஞ்ஞ் மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து – குறுகாயோ

★★★

மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த – மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவேலெ றிந்த – அதிதீரா

★★★

அறிவால றிந்து னிருதாளி றைஞ்சு
மடியாரி டைஞ்சல் ஞ்ஞ் களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து
அலைவாயு கந்த – பெருமாளே.

## பாடல் விளக்கம்

- விறல்மாரன் – வீரனாம் மன்மதன்
- ஐந்து மலர்வாளி சிந்த – ஐந்து மலர்ப் பாணங்களையும் செலுத்த,
- வானி லிந்து மிக வெயில் காய – ஆகாயத்தில் நிலவு அதிகமாக வெயில் போலக் காய,
- மிதவாடை வந்து – நிதானமான தென்றல் காற்று வந்து
- தழல்போல வொன்ற – தீப்போல வீசிப் பொருந்த,
- வினைமாதர் தந்தம் வசைகூற – வீண்வம்பு பேசும் பெண்கள் தத்தம் வசை மொழிகளைக் கூற,

★★★

- குறவாணர் குன்றி லுறை – குறவர்கள் வாழும் குன்றில் இருக்கும்
- பேதை கொண்ட – (வள்ளி போன்ற) பேதைப்பெண்ணாகிய நான் அடைந்த
- கொடிதான துன்ப மயல்தீர – கொடிய துன்ப விரக மயக்கம் தீர,
- குளிர்மாலை யின்கண் – குளிர்ந்த மாலைப் பொழுதினிலே
- அணிமாலை தந்து – நீ அணிந்த கடப்ப மாலையைத் தந்து
- குறைதீர வந்து குறுகாயோ – என் குறையைத் தீர்க்க வந்து அணுகமாட்டாயா?

★★★

- மறிமா னுகந்த இறையோன் – இள மானை உகந்து ஏந்தும் இறைவன் சிவபிரான்
- மகிழ்ந்து வழிபாடு தந்த மதியாளா – (உன் உபதேசம் பெற்று)
- மகிழ்ந்து உனக்கு வழிபாடு செய்யப் பெற்ற அறிஞனே,
- மலைமாவு சிந்த – கிரௌஞ்சமலையும், மாமரமும் (சூரனும்) வீழ்ந்து படவும்,
- அலைவேலை யஞ்ச – அலைகடல் கொந்தளித்து அஞ்சவும்,
- வடிவே லெறிந்த அதிதீரா – கூரிய வேலை வீசிய அதி தீரனே,

★★★

- அறிவால் அறிந்து – அறிவு கொண்டு உன்னை அறிந்து,
- உன்னிருதாள் இறைஞ்சும் – உனது இரு தாள்களையும் வணங்கும்
- அடியார் இடைஞ்சல் களைவோனே – அடியார்களின் துயரைக் களைபவனே,
- அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து – அழகிய செம்பொன் மயில்மீது அமர்ந்து
- அலைவா யுகந்த பெருமாளே. – திருச்செந்தூரில் மகிழ்ந்தமரும் பெருமாளே.

திருமணமாகாத ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும், இந்த மந்திரத்தை உச்சரிப்பதோடு சேர்த்து, சுமங்கலிப் பெண் களுக்கு, வெற்றிலை, பாக்கு, பூ சேர்த்த தாம் பூலத்தை, தானமாக கொடுத்து, 11 சுமங்கலி பெண்களை ஒன்றாக நிற்க வைத்து, அவளுடைய காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொள்வது, எப்படிப்பட்ட தோஷத்தையும் நிவர்த்தி செய்யும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

முடிந்தால், உங்கள் வீட்டிற்கு சுமங்கலி பெண் களை அழைத்து, உங்களால் முடிந்த உணவை பரிமாறி, தாம்பூ லம் கொடுத்து, ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

எந்த ஒரு மந்திரமாக இருந்தாலும் நம்பிக் கையோடு உச்சரிப்புடன், சேர்த்து அதனுடைய அர்த்தத்தையும் புரிந்து கொண்டு உச்சரிப்பதால் கிடைக்கக்கூடிய மனநிறைவு அதிகமாகவே இருக்கும் என்ற ஒரு கருத்தை முன்வைத்து, திருமணத்திற்காக காத்துக் கொண்டிருக்கும் ஆண் பெண் இருவருக்கும், விரைவில் திரு மணம் நடக்க வேண்டுமென்றும், திருமணம் என்பது ஒரு வரப்பிரசாதம், அதை வரமாக பெற் றுக் கொண்டவர்கள் இல்லற வாழ்க்கையை இனிமையாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

# சங்ககாலத்தில் பாடப்பட்ட காவடி பாட்டு

முருகனுக்கு உகந்த காவடி என்பது அனைவரும் அறிந்தது. இந்த காவடி எடுக்கும் பழக்கம் தொன்று தொட்டே இருந்து வருகிறது. இவ்வாறு காவடி எடுக்கும்போது அக்காலத்தில் வழிநெடுகிலும் பக்தர்களால் அழகிய கிராமத்து பாடல்கள் பாடி காவடி சுமந்து வருவார்கள்.

இவ்வாறு காவடி எடுத்து வழிநெடுக நடந்து பழனிக்கு மற்றும் அருகிலிருக்கும் முருகன் கோவிலுக்குச் செல்வது தமிழகம் முழுதுமான இயல்பு. இந்த பழக்கம் சங்கம் முதலே இந்தப் இருந்திருக்கிறது. அக்காலத்துடன் ஒப்பிடும் போது இக்காலத்தில் டெக்னாலஜிக்கேற்ப மக்கள் மாறினாலும், சங்க காலத்தில் பயன்படுத்திய பாடல்களை நினைவு கூற வேண்டியது அவசியம்.

அந்தப் பாடல்கள் மிகப்பெரியதாக இல்லாமல் நான்கு வரி, ஐந்து வரி என்று மிகச் சிறியதாக இருக்கும். பாடவும் மிக சுவாரஸ்யமாக இருக்கும். அந்தப்பாடல்களைப் பற்றி பார்ப்போம்.

"எட்டடிக் குச்சுக்குள்ள சுப்பையா
எப்படி நீயிருப்ப
மச்சூடு கட்டித் தாறோம் சுப்பையா
மலையில் வேலவரே..."

ஒருவர் பாட மற்றவர்கள் பின் தொடர்வார்கள்.

தங்குமிடத்திலும் கோயில்களிலும் ஒன்று கூடி கும்பிப் பாட்டுப் பாடுவார்கள். இதற்கு 'வள்ளிக் கும்மி' என்றே பெயர்.

'தாம்தையர்
தன்னேனன்னே னானானன்னே
னானா தன்னம்
தானானே னானேனன்ன னானா
னானானே னானேனன்ன
னானானே னானேனன்ன னானா
தன்னே னானா'

என்பது போன்ற பல மெட்டுக்கள் அந்த வள்ளிக் கும்மியில் இருக்கும்.

"பார்க்க வேண்டும் பார்க்க வேண்டும்
என்று அந்தப் பழனிமலை ஒருமுறை
சென்றுபார்வையிலே பள்ளி கொள்ளும்
பரமன் திருமுகனைக் கண்டு
மனம் மகிழ்ந்து."

"சுற்றச் சலம் வையாபுரிக் குளமாம் அதன்
சுற்றளவு பத்தாயிரம் முழமாம் அதைச்
சுற்றி வந்து குளிப்பவர்க்கு நித்தம் நித்தம்
தந்தருள் செய்வீயா முருகையா"

இது தவிர வழி நெடுக காவடி எடுத்து வரும் பக்தர்களால் பாடப்படும் சிந்துப் பாடல்கள்...

"சுருளிமலை மீதில்மேவும் சீலா உனைத்
தேடித்திரிந்தேன் சுப்ரமணிய வேலா பசுந்
தோகைமயில் மீதிலேறி வாருடனே
காத்தருளும் துய்யா முரு கையா"

இதன் பெயரே காவடிச்சிந்து. இது வழிவழி யாய்ச் செவிவழியாய் வந்து பாடப்பெறும் முருகன் பாடல்கள்.

15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரி நாதரால் பாடப் பெற்றது திருப்புகழ். 'திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும்' சத்தியமான உண்மை. வாய் மணக்கும் என்பது வாசம் வீசுவதல்ல. அந்தப் பாடல்களில் நிறைந்திருக்கும் லகர, ளகர, ழகர, ரகர, றகர உச்சரிப்புகளைப் படிக்கப் படிக்க அவைகள் உங்கள் நாவிற்கு வசப்படும்.

16 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற கந்தர் சஷ்டி கவசமும் முருகன் மீது பாடப் பெற்றதுதான். அந்நாளைய எழுத்து மற்றும் பேச்சு வழக்கில் கலந்திருந்த சமஸ்கிருதக் கலப்பிற்கிற்கு ஆளாகி கந்தர் சஷ்டி கவசப் பாடலிலும் ஆங்காங்கே மொழிக் கலப்பு இருக்கிறது. ஆனாலும் முருக பக்தர்களால் விரும்பிப் பாடப்படும் பாடல்களில் அதுவும் ஒன்று.

இந்தப் பாடல்கள் அனைத்திலும் முருகன் வழிபாடு மட்டுமே பிரதானம். முருகன் வழிபாட்டில் ஈடுபடும் தமிழர்கள் கிராமந்தோறும் இருக்கிறார்கள். தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் வருடத்தின் ஏதாவது ஒரு மாதத் தில் காவடி எடுப்பார்கள். இது எப்போதிலிருந்து என்று கேட்டால் அவர்களுக்கு விடை தெரியாது. தொன்று தொட்டு நிகழும் ஒரு வழிபாடு என்பதேஉண்மை!

இப்படிக் காவடி எடுத்து, நடைவழிநடந்து, பாடல்பாடி, ஆட்டாமாடி முருகனை வழிபடும்போது மிகப்பெரிய பக்தித் திருவிழா நடைபெறுவதைப் போன்று மிக அருமையாக இருக்கும்.

– புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572








புனிதவேல்

ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share
செய்யுங்கள்

www.aanmeegamalar.com

## பிணிநீக்கம், புத்திரபேறு, மாங்கல்யபேறு, செல்வப்பேறு ஆகியவை தரும்

# திருமலை சொக்கம்மாள் ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் ஈசனும் தாயாரும்



வேலன்




தனக்கோட்டி செட்டியார்-மங்கையற்கரசி என்னும் தம்பதியர் பல தான தருமங்கள் செய்து சீறும் சிறப்புடனும் வாழ்ந்துவந்தனர். அநேக தான தருமங்களை செய்தும் புண்ணிய தலங்கள் பல சென்றும் அவர்களுக்கு குழந்தைபாக்கியம் இல்லை.

குழந்தை இல்லாத குறையை எண்ணிதனக்கோட்டி மங்கையற்கரசி தம்பதியர் வருந்துகையில் சாட்சாத் வேதகிரி பெருமான் சிவனடியார் திருவுருக்கொண்டு அவர்கள் இல்லம் சென்றார்.

வணிகர் பத்தினியோடு அவரை எதிர்கொண்டழைத்து வந்து தக்க ஆசனமளித்து அமரச்செய்து திருவடிக் கமலங்களுக்கு சுகந்த நீராட்டி கலவைச் சாந்தீட்டு நறுமலராலர்ச்சித்து சுவாமி இக்குடிசையில் திருவமுது செய்து அடியார்கள் எங்கள் குறையை நீக்கிட வேண்டுமென பிராத்தித்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து வேண்டி நிற்க பெருமான் மனமிரங்கி, "நீங்கள் வேதகிரிமலையை ஒருமண்டலம்விதிப்படி கிரிவலம்வர புத்திரபேறு உண்டாகு"மென திருவாய்மலர்ந்து மறைந்தார்.

அதன்படியோஇருவரும் விதிப்படிஒரு மண்டலம்48நாட்கள் சங்குதீர்தத்தில் புனிதநீராடி, வேத கிரி மலையை கிரிவலம் வந்து, முடிவில் வேத கிரிஸ்வரருக்கும் திரிபுரசுந்தரி அம்மனுக்கும் விஷேஷ அலங்கார உத்ஸவாதிகள் செய்து வைத்து அடியார்களுக்கு அன்னதானம் செய்து அவர்கள் இல்லம் சென்று உறங்கினர்.

காலையில் குழந்தை அழுகுரல் கேட்டு துயில் எழு கையில் பரமேஸ்வரியே குழந்தை உருவாய் தம்பக்கத்தில் இருக்க கண்டு ஆனந்தம் பொங்கி இருகரங்களாலேந்தி உச்சி மோந்து கொஞ்சி மகிழ்ந்தனர்.



வேத ஆகமச் சடங்குகள் செய்து என்ன பெயர் வைக்கலாம் என யோசிக்கையில் அசரீரியாய் சொக்கம்மாள் என்னும் திருநாமஞ்சூட்டு என கேட்ட அனைவரும் ஆனந்தமடைந்தனர்.

அன்னதானம், சொர்ணதானம் என 32 தானங் களும் அவரவர் விருப்பபடி வேண்டிய அளவு கொடுத்து குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்த்து வந்தார்கள்.அப்படி வளர்ந்து வந்த அம்மையாருக்கு பன்னிரண்டு வயது ஆனதும் தங்குல முதியோர் பந்துக்கள் சேர்ந்து நல்ல தினத்தில் திருமணம் முடிக்க ஆலோசனை செய்தனர்.

அப்போது சொக்கம்மன் தனது தந்தையாரை நோக்கி வேதமலையை வலம் வந்து பிறகு தான் திருமணம் பற்றி முடிவெடிக்க வேண்டும் என கூற, அதன்படியே வேதமலையை வலம்வர முடிவு செய்தனர். அதன்படி வணிகர்கோன் திருமலைச் சொக்காமெனும் திருத்தேவியரை அழைத்துக் கொண்டு திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ள சங்குதீர்த்தத்தில் நீராடி வேதமலையை வலம் வரும்போது தந்தையார் முன்னும் அம்மையார் பின்னுமாக மலையை வலம்வரத்




ஈசான லிங்கம்

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

தொடங்கினர்.

மலைக்கு வடக்குத் திசையில் பிரதக்ஷணமாகப் போகும்போது மலை அடியில் ஒரு பாறை மீது வேதகிரிப்பெருமான் அமர்ந்திருப்பது அம்மையார் கண்ணுக்கு மட்டும் தெரிய அம்மையார்அடையுமிடம் வந்ததை உணர்ந்து பெருமானிடம் நெருங்கிட வேதகிரிப் பெருமான் தேவியை அழைத்துக் கொண்டு மலைமீது ஒரு இடத்தில் தங்கவும்.




முன்னம் சென்ற செட்டியார் திரும்பி பார்த்து குழந்தையை காணாது திகைத்து மயங்கி முன்னும் பின்னும் ஓடி ஓடி தேடியும் காணாமல், ஒவேன கதறிய வண்ணமாக திருமலைச்சொக்கம்மாள் என்று பலமுறை கூவி அழைக்க,

மலைமீதிருந்து வந்த குரலின் திசையறிந்து மலை மீதேறி பார்க்க, சுவாமி முன்னும் அம்மையார் பின்னும் நிற்பதறிந்து மெய் சோர்ந்து அடியற்ற மரம்போல சுவாமி பாதத்தில் விழுந்து கதற,

இறைவன் அவர் முன் தோன்றி, "அன்பரே வருந்தவேண்டாம். உம்முடைய அன்புக்கு வேண்டி உம்மிடம் பரமேஸ்வரியே குழந்தையாக வளர்ந்துவந்தாள். இனி உன்னுடன் வரமாட்டாள். வேண்டிய வரம்கேள்" என கேட்டார். அதற்கு செட்டியார் சுவாமி தங்களை அடைந் தும் அகில உலக மாதாவையே மகளாக பெற்றும் நான் அடைந்ததைக் காட்டிலும் வேறு பேறு எனக்கு என்னவேண்டும்.

ஆயினும் சுவாமிகள் அம்மையாரோடு இவ்விடத்திலேயே இருந்திடல்வேண்டும். உங்களை வந்தடைந்து தரிசனம் செய்யும் அன்பர்களுக்கு புத்திரபேறு, மாங்கல்யபேறு, செல்வப்பேறு, பிணிநீக்கம் என்று அவரவர் கோரியபடி வரத்தை அருளவேண்டும் என வேண்டுகோள் விடுக்க, அதன்படியே வேத கிரிஸ்வரர் வரம் அருளி தன்னை வேதகிரி மலை மீது வந்து பார்க்க என்று அருளிச்செய்தார்.

வணிகர்கோன் அக்கட்டளையை சிரமேற்றாங்கி வேதமலை உச்சியிலே சென்று பார்க்க அங்கும் அம்மையாரோடு காட்சியளிக்க கண்ட தனக்கோட்டி செட்டியார் பேரானந்தம் கொண்டவராய்,

சுவாமி அப்பனே! வேதகிரி பெருமானே! அம்மையாரை விட்டு நீங்காச் செல்வம் வேண்டுமெனப்பிராத் திற்க. பெருமான் அம்மையார் சன்னிதானத்திலே இருக்க மோட்சமளித்தார்.

வணிகர்கோன் விதேக முக்கியடைந்தார். (வேதகிரீஸ்வரர் மலைமீது வேதகிரியை தரிசத்து வலம்வருகையில் சொக்கம்மன்சன்னதிமுன் இருகரம் கூப்பியபடிதனக்கோட்டி செட்டியார்சிலை இருப்பதை காணலாம்) அம்மையாரை வளர்த்த மங்கற்கரசியாருக்கும் பெருமாள் சாயுச்சிய பதவியளித்தார். அகில உலக மாதாவை மகளாகப் பெற்ற இருவரும் பெரும் பதவியும். புகழும் உலகம் உள்ளளவும் பெற்றார்கள். அந்த நாள் முதல் ஈசன் வேதகிரிப்பெருமான் கொடுத்த வரத்தின் வாக்குப்படி வேதமலையின் மேல் வடக்கு திசையில் திருமலைச் சொக்கம்மன் ஆலயம் என்று அழைக்கப்படுகின்றது.

வேதகிரி ஈஸ்வரர் தேவியரோடு சேர்த்த சுபதினமான பங்குனி உத்திர சுபவேளையில் மேற்சொன்ன வணிகர் குல பரம்பரையார் அம்மனுக்கு மஹா அபிஷேகமும் திருக்கல்யாணமும் வெகு சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

சென்ற நூற்றாண்டில் திருமலையில் பட்சிகளுக்கு அமுதூட்டிய பரம்பரையில் வந்த திரு. வேதப்ப முதலியார், திரு.சமரபுரி முதலியார், திரு. பழனி முதலியார், திரு.மலைமருந்து முதலியார், திரு.வீராசாமி முதலியார், திரு.ராஜேந்திரன் முதலியார் என வம்சாவழி வம்சத்தினர் தற்போது திருமலை சொக்கம்மன் ஆலய பூஜை செய்து வருகின்றனர். வேதகிரி மலையை கிரிவலம்வருகையில் சிறிய மலைமீது அமைந்துள்ள திருமலை சொக்கம்மன் ஆலயத்தினையும் தவறாமல் தரிசித்து வாருங்கள்.

தகவல்: திருமலைச்சொக்க நாயகி அம்மாள் சரித்திர சுருக்கம் என்கின்ற நூலிலிருந்து.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.


www.aanmeegamalar.com

## தீய சக்திகள் அண்டாமல் தவிர்க்க

# படுக்கையை மடித்து வையுங்கள்

காலையில் தூங்கி எழுந்தவுடன் படுக்கையையும் போர்வையையும் மடித்து வைக்கச் சொல்லி வீட்டில் பெரியவர்கள் எப்போதும் சொல்கிறார்கள். எதற்காக அப்படிச் சொல்கிறார்கள்?

அந்தக் காலத்தில் படுப்பதற்கென்று தனியாக பெட்ரூம் கிடையாது. அனைவரும் சேர்ந்து ஒரே இடத்தில் படுத்திருப்பார்கள். ஒருவர் ஒரு இடத்தில் தொடர்ந்து அதிக நேரம் இருக்கும்போது, அந்த இடத்தில், அவருடைய ஒளி உடலின் தன்மை எஞ்சியிருக்கும். காட்டு விலங்குகளுக்குக் கூட இதை உணரும் சக்தி நன்கு இருக்கிறது.

ஒரு மனிதன் ஒரு இடத்தில் சிறிது நேரம் இருந்துவிட்டு பின் சென்று விட்டாலும், அங்கு வரும் விலங்குகள், இங்கு ஒரு மனிதன் சிறிது நேரத்திற்கு முன்னால் இருந்திருக்கிறான் என்று தெரிந்து கொள்கின்றன.

இதை வாசனை மூலம் மட்டும் அவை அறியவில்லை. அங்கிருக்கும் அதிர்வுகள் வைத்தும் அவை தெரிந்து கொள்கின்றன. சூட்சுமமாக இருக்கும் ஒரு மனிதன்கூட இப்படி அறிந்து கொள்ளமுடியும்.

நாம் படுத்த படுக்கையை துர்சக்திகள் கூட, தீய விளைவுகளை ஏற்படுத்தவாய்ப்பு உள்ளது.

படுக்கையும், போர்வையும் மடித்து வைக்காமல் இருக்கும்போது, படுக்கையை 10 பேர் மிதித்துக் கொண்டு போகவும் வாய்ப்புள்ளது, துர்சக்திகளும் ஆக்கிரமிக்க வாய்ப்புள்ளது.

இந்த நிலையில், அதே படுக்கையில் அவர் அன்றிரவு படுப்பது, நிச்சயமாக அவருடைய ஆரோக்கியத்திற்கும், மன நலனுக்கும் நல்லதில்லை. மேலும் அவருடைய உடலும், அந்தப் படுக்கைக்கு, அந்த சூழ்நிலையில், அவ்வளவு எளிதில் ஒத்துப்போகாது.

இன்னொரு உதாரணம் மூலமும் இதை விளக்க முடியும். நீங்கள் ஒரு புதிய இடத்திற்குச் செல்கிறீர்கள். எல்லாம் வசதியாகவே இருக்கின்றன. நீங்களும் களைப்பாகத்தான் இருப்பீர்கள். இருந்தாலும் படுத்தால் தூக்கம் வராது. ஏனெனில் உங்கள் ஒளி உடலுக்கு அங்கிருக்கும் தன்மையுடன் ஒத்து வரவில்லையென்றால் உங்கள் உடல் அங்கு சுகமாகவே இருக்காது. தேவையற்ற கனவுகளும் உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்க வாய்ப்புண்டு.

ஆனால் படுக்கையைச் சுருட்டி வைத்து உபயோகிக்கும்போது, உங்கள் படுக்கையின் தன்மை மற்றவர்களால் பாதிக்கப்படாமல் இருப்பதால், படுத்தவுடனேயே உங்கள் உடல் படுக்கையில் ஒத்துப்போகும். உடல் மனம் இரண்டுமே பாதிப்பின்றி சுகமாக இருக்கும். ஒருவர் உடுத்திய உடையை இன்னொருவர் உடுத்தக்கூடாது, ஒருவர் படுக்கையை இன்னொருவர் பயன்படுத்தக் கூடாது என்பதெல்லாம் இதன் அடிப்படையில்தான்.

இப்போது பல வீடுகளிலும் கனமான மெத்தை போட்டுப் படுக்கப் பழகி வருகிறார்கள். படுக்கையிலிருந்து எழுந்தவுடன் ஒரு துணி போட்டு மூடிவிட வேண்டும். இப்படிச் செய்யும்போது, நம் மனநிலை மற்றும் ஆரோக்கியத்தைத் தொடர்ந்து பாதுகாக்க முடியும்.




www.aanmeegamalar.com

# ஸ்ரீ ஷிர்டி சாய்பாபா

ஸ்ரீ தத்தரின் கலியுலக கடைசி அவதாரமே, ஸ்ரீ ஷிர்டி சாய்பாபா. இவரை பற்றியோ,இவரது லீலைகளை பற்றியோ வார்த்தைகளால் யவரா லும் விளக்க இயலாது. ஸ்ரீ தத்தரின் அவதார மான பாபா அனைவராலும் அன்பாக "ஷீரடி ஸாயீ பாபா" மும்பை மாநகரில் அஹமது நகர் ஜில்லாவான "ஷீரடியில்" 16 வயது வாலிப னாக வேப்பமரத்தினடியில் தோன்றினார்.

இவரின் உறுதியான தகவல்கள் தெரியாமால் மிகவும் ரஹஸ்யமானதாக உள்ளது. இன்று பல லக்ஷக்கணக்கான பக்தர்களால் அதிகம் வணங் கப்படும் குருவாக ஸ்ரீ சாய் பாபா விளங்குகிறார். எப்பேர்ப்பட்ட கோரிக்கையாகினும் இவரை நினைத்த மாத்திரத்தில் நடப்பது என்பது கண் கூடு. ஜாதி மத இன வேறுபாடின்றி அனைத்து தரப்பின மக்களால் வாங்கப்படுபவர். ஹிந்து முஸ்லீம் பக்தர்களிடையே ஒரு பாலமாக விளங்குகிறார்.



## அற்புதங்கள்

- ❖ கோதுமை மாவை அறத்தின் மூலம் காலரா தொற்று வியாதியை விரட்டியது.
- ❖ ஒரு சமயம் வியாபாரிகள் அனைவரும் ஸ்ரீ பாபாவுக்கு எண்ணெய் தர மறுக்க, தண்ணீரினால் விளக்கை ஏற்றியது.
- ❖ குழந்தை காபர்டேயின் ப்ளேக் வியாதியை குணப்படுத்தியது.
- ❖ தன்னை நாடிவந்த அனைவரின் வ்யாதிகளையும், பாவங்களையும் போக்கும் "ஹக்கீம்" ஆக விளங்கினார்.

## ஸ்ரீ தத்த அவதாரங்கள் - 7

- ❖ பாம்பின் விஷக்கடியிலிருந்து தனது பல பக்தர்களை காப்பாற்றியது
- ❖ இவரின் பிரசாதமான உதி தீராத பலவயதி களையும், உயிர்கொல்லி நோய்களையும் போக்கும் அபார வல்லமை கொண்டது.
- ❖ நாம் எந்த தேவதா ரூபமாய் வணங்குகி றோமோ அந்த தேவதா மூர்த்தமாக காட்சி அளித்து பரவசப்படுத்துபவர்.

## பாபாவின் 11 உபதேச மொழிகள்

1. ஷீரடி ஸ்தலத்தை எவன் மிதிக்கிறானோ, அவனுடைய துன்பம் ஒரு முடிவை அடைந்து சௌகர்யத்தை அடைகிறான்.
2. துவாரகாமாயீயை அடைந்த மாத்திரத்தில் பெரும் துன்பத்திற்கு உள்ளானவர்களும் மிகுதியான சந்தோஷத்தை அடைவார்கள்.
3. இவ்வுலகை விட்ட பிறகும் சர்வ சக்தியுடன் வேலை செய்வேன்.
4. என்னுடைய மசூதி என் பக்தர்களுக்கு அநேக ஆசிர்வாதங்களையும், புத்திமதி களையும் கொடுக்கும்.
5. என்னுடைய பூத உடல் என் மசூதியிலிருந்து பேசும்.
6. என்னுடைய மசூதியிலிருந்து கொண்டே நான் மிகவும் சுறுசுறுப்பாகவும் தீவிரமாக வும் இருப்பேன்.
7. என்னிடம் வருபவர்களுக்கும் என்னை தஞ்சம் அடைபவர்களுக்கும், என் உபதே சத்திற்காக என்னிடம் தீவிர நம்பிக்கை உள்ளவர்களுக்கும் நான் எப்பொழுதும் உயிருடன் இருக்கிறேன்.
8. நீ என்னை அடைந்தால் நான் உன்னை கடாஷிக்கிறேன்.
9. நீ என் பேரில் உன் பளுவை சுமத்தினால் நான் நிச்சயமாக அதை தாங்குவேன்.
10. நீ என் உபதேசத்திற்காகவும் உதவிக்காக வும் என்னை அடைந்தால், அவைகளை உடனே நான் உனக்கு கொடுப்பேன்.
11. என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒரு போதும் தேவை என்பதே இருக்காது.

பல ஜென்ம புண்ணியத்தினால் மட்டுமே ஸ்ரீ சாய் சத்சரிதத்தை படிக்கும் வாய்ப்பு கிடைக்கும். நம்பிக்கை என்பது ஒரு இடத்தில் மட்டுமே வைக்கும்போது மிகுதியான பலன் கிடைக்கும்.

அந்த நம்பிக்கையை பாபாவின் மீது வைத்து, அவரின் பாதகமலங்களைப் பூஜித்துக் கொண்டு பாபாவையே தியானித்துக்கொண்டு இருங்கள்.

ஸ்ரீ சாய் சத்சரித்திரம் என்ற புத்தகம் உண்மை யில் கடவுளின் அவதாரமேயாகும். பாபாவின் சக்தி சத்சரிதத்தின் ஒவ்வொரு எழுத்தின் உள்ளேயும் பொதிந்து கிடக்கின்றன. சத்சரிதத்தை வாய்விட்டு உரக்கவோ, மனதிற்குள்ளாகவோ, மனமும் குரலும் சேர்ந்து உபன்யாசமாகவோ பக்தியுடன் பாராயணம் செய்யும் பொழுது ஸ்ரீ சாய்நாதரின் தெய்வீக சைதன்யம் அந்த திசை யை நோக்கி ஈர்க்கப்படும்.

ஒரு பக்தனின் அனைத்து உடல் சார்ந்த, உயிர் சார்ந்த, மானசீக நோய் சம்பந்தமான, தொந்தரவுகள், கஷ்டங்கள் அனைத்து அதிர்வுகளும் ஸ்ரீ சாய் சரித்திரத்தை பாராயணம் செய்யும் பொழுது அவை ஸ்ரீ சாய்நாதரின் தெய்வீக சைதன்யத்தை சென்றடைகின்றன. அவை அங்கு சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் பாராயணம் செய்யும் பக்தரை ஸ்ரீ சாய்நாதரின் அருள் நிரம்பிய அலைகளாக திரும்ப வந்து சேருகின்றன. இது போன்ற சூழ்நிலைகளில் பக்தன் இகலோக சுகங்களையும் பரலோக சுகங்களையும் பெறுவான்.

பெரும்பான்மையான சாய் பக்தர்கள் ஸ்ரீ சாய் சத்சரிதத்தை முழுமையாக படித்ததில்லை. சிலர் ஓரிரு முறை பாராயணம் செய்ததோடு நிறுத்திவிடுகின்றனர்.

உண்மையில் பாபாவை விரும்பும் பக்தர் தினமும் ஒரு அத்தியாயத்தையாவது படிக்கவேண்டும். உங்களின் சத்சரித்திர பாராயணத்தின் போது பாபா உங்கள் அருகிலேயே அமர்ந்து, மிகவும் மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருப்பார். இதுவரை ஸ்ரீ சாய் சத்சரிதத்தை படிக்காதவர்கள், அல்லது சத் சரிதத்தை ஏழு நாட்களுக்குள் (சப்த பாராயணம்) செய்ய நினைப்பவர்கள், நீங்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் உங்கள் வீட்டில் இருந்தபடியே வரும் வியாழன் அன்று தொடங்குங்கள்.

### சப்தாக (ஏழு நாட்கள்) பாராயண முறை;

காலையில் எழுந்து நீராடி பாராயணம் செய்யும் இடத்தை சுத்தம் செய்து தீபத்தை ஏற்றி பூக்களுடன் அலங்கரித்து நூலினை சாயியின் ஸ்வரூபமாகவே பாவித்து சாய் அஷ்டோத்திரத்தை படித்து பாராயணம் ஆரம்பிக்க வேண்டும். அன்றைய பாராயணம் முடிந்தவுடன் ஆரத்தி எடுத்து வணங்க வேண்டும். ஏழு நாட்கள் பாராயணம் முடிந்தவுடன் அவரவர் சக்திக்கு ஏற்ப அண்ண தானம் செய்ய வேண்டும். இப்படி சிரத்தையுடன் பாராயணம் செய்தால் தாங்கள் வேண்டியது நிறைவேறும். பாபாவின் அருளும் ஆசியும் கிடைக்கும்.

ஏழு நாட்கள் பாராயணம் செய்ய வேண்டிய அத்தியாங்களின் விவரங்கள்;

அத்தியாயம் 1 முதல் அத்தியாயம் 7 வரை.
அத்தியாயம் 8 முதல் அத்தியாயம் 15
அத்தியாயம் 16 முதல் அத்தியாயம் 22
அத்தியாயம் 23 முதல் அத்தியாயம் 30
அத்தியாயம் 31 முதல் அத்தியாயம் 37
அத்தியாயம் 38 முதல் அத்தியாயம் 44
அத்தியாயம் 44 முதல் முடிவுரை வரை

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# இறைவனுடன் இருப்பதுதான் மிக முக்கிய கருத்து

98
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: "நான் ஒருபோதும் எதிர்காலத்தைப்பற்றியோ அல்லது கடந்த காலத்தைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. ஒவ்வொரு நாளும் இறைவனுக்காக வாழ்கிறேன், அவ்வளவுதான். என்னால் முடிந்தது எதுவாயினும் மிகச்சிறப்பாகச் செய்வேன். ஆனால் நான் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. இந்த உலகத்தில் இறைவனுக்காக மட்டும் வேலை செய்கிறேன். மேலும் எனக்கு என்ன நிகழ்ந்தாலும் அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நான் தொடர்ந்து இறைவனுடன் இருக்க முடியாத அளவுக்கு எனக்கு என்ன நேர்ந்துவிடும்? நான் இந்தியாவில் இருந்தபொழுது மௌண்ட் வாஷிங்டனில் உள்ளவர்களுக்கு எழுதினேன். "நீங்கள் எல்லாரும் இல்லாத குறையை நான் ஒருபோதும் உணரவில்லை. ஏனெனில் நான் உங்களிடம் இன்னும் அதிகமாக இருக்கிறேன். வாழ்க்கை எனும் பெருங்கடலின் மேற்பரப்பிலிருந்து இந்த அலை மறைந்த பிறகு வேறு எங்கோ நான் இருப்பேன். ஆனால் இங்கேயோ அல்லது அங்கேயோ, நாம் அனைவரும் இறைவனது அதே வாழ்க்கைப் பெருங்கடலில் இருப்போம்."

"எனவே இறைவனை நீங்கள் அறியும்பொழுது, உங்கள் நண்பர்கள் மற்றும் அன்பிற்குரியவர்களைப்பற்றி, அவர்கள் உங்களிடமிருந்து பிரிக்கப்படும்பொழுது நீங்கள் ஒருபோதும் வருந்தமாட்டீர்கள். கடந்த காலத்தில் நான் அறிந்த பல நண்பர்களை மீண்டும் இந்த வாழ்க்கையில் நான் கண்டுள்ளேன். மேலும் இப்பொழுது என்னை அறிகிறவர்கள் மீண்டும் எதிர்காலத்தில் என்னை அறிவார்கள்."

குருதேவர் தொடர்கிறார்: "நான் முதலில் அமெரிக்கா வந்தபோது உங்களில் சிலரது முகங்களை தெய்வீகக் காட்சியில் கண்டேன். அதனால்தான் நான் எழுதினேன். "கடல்மேல் கப்பலில் பயணித்துக்கொண்டிருக்கும்போது மீண்டும் ஒருமுறை நண்பர்கள்


www.aanmeegamalar.com

ஆகப்போகிற நண்பர்களின் உறங்கும் நினைவுகள் என்னை வரவேற்றன." இந்த அன்னிய தேசத்து துறைமுகத்தினுள் கப்பல் வரும்பொழுது, நான் மிகுந்த வருத்தத்தை உணர்ந்தேன். நான் கவலையுள்ளவனாயிருந்தேன் மற்றும் எனது இந்தியா ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவு என்னும் இருளில் மறைக்கப்பட்டுவிட்டது. ஆனால் அப்பொழுது ஒரு திவ்விய காட்சியில் என் கடந்தகால பிறவிகளில் இதற்கு முன்பு எனக்குத் தெரிந்திருந்த இங்கேயுள்ள பலரது முகங்களைப் பார்த்தேன். ஒரு மகத்தான ஆனந்தம் என்னை ஆட்கொண்டது."

அவர் தொடர்கிறார்: "மேடம் கலிகுர்ஸி மற்றும் அவரது கணவரை நான் முன்னமே அறிந்திருந்தது எனக்குத் தெரியும். ஒருநாள் ஓர் ஒலிப்பதிவு இயங்கிக் கொண்டிருந்தது நான் கேட்டேன். "யாருடைய ஒலிப்பதிவு இது? மீண்டும் அதை இயக்குங்கள்" அந்தக்குரல் கலிகுர்ஸியினுடையது. "நான் அவரைப் பார்க்கப் போகிறேன்." நான் கூறினேன். சிறிது காலம் கழித்து ஓர் இரவு சிகாகோவில், ஒரு நண்பர் வந்து என்னிடம் கூறினார், "உங்களுக்குத் தெரியுமா, மேடம் கலிகுர்ஸி இங்கே இந்த நகரத்தில் உள்ளாரென்று. நீங்கள் அவரை அவசியம் பார்க்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது." எனக்கு ஓர் அறிமுகக் கடிதம் கொடுக்கப்பட்டது. மேலும் மற்றவர்கள் என் சார்பில் அவரை தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர். ஆனால் அவரது அனைத்து நிகழ்ச்சிகளுக்கான நுழைவுச் சீட்டுகளும் விற்றாகிவிட்டன. இறுதியில் நிர்வாகி தானே தனது மகளின் நுழைவுச் சீட்டைக் கொடுத்தார். இசை நிகழ்ச்சிக்குப் பிறகு மேடம் கலிகுர்ஸியும் நானும் சந்தித்தபோது அவர் என்னை வரவேற்றுக் கூறினார். "உங்களுக்கு முன்னரே ஒரு நுழைவுச்சீட்டு கிடைக்கச் செய்யாததற்கு நான் அவர்களை கடிந்து கொண்டேன்." அன்றிலிருந்து நாங்கள் நண்பர்களாயிருக்கிறோம். மேலும் அவரும் அவரது கணவரும் இந்தப்பாதையை விசுவாசமாகப் பின்பற்றி வருகிறார்கள்."

இறைவனுடன் இருப்பதுதான் மிகச் சிறந்தது. இறைவன் உண்மையான அன்புடையவன். இறைவன்தான் 'சத்தியம்'. சத்தியமே இறைவனானால் அவனிடத்திலிருந்து வெளிப்படுகின்ற அன்பு எவ்வாறிருக்கும் என்பதை அவனை உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும். சம்சார வாழ்வில் உறவுகளும் இருக்கிறது உறவினர்களும் இருக்கின்றனர். ஆனால் இந்த உறவினர்கள் எல்லாம், நூற்றிற்குத் தொண்ணூற்றி ஒன்பது பேரும் சுயநலவாதிகள்தான். நன்றாகப் பழகுவார்கள். மிகுந்த அன்பை வெளிப்படுத்துவர். ஆனால் எப்பொழுதாவது நாம் பேசும்போது அவர்களுக்குப் பிடிக்காததைப் பேசினால், அப்பொழுதுதான் தெரியும் அவர்களுடைய உண்மை சுயரூபம். ஆனால் நாம் பேசியது மிகவும் சாதாரணமாகத்தான் இருக்கும். அது அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாக அவர்களுக்குத் தோன்றும். "நாம் என்ன சொன்னோம் இப்படி கோபம் வருகிறதே" என்று நாம் நினைப்போம். ஏன் என்றால் அவ்வாறு கோபம் வருபவர்களுக்கு ஆன்மாவைப்பற்றித் தெரியவில்லை; அதனால்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

அவர்கள் இறைவனை உணரவில்லை. அவர்கள் இறைவனை உணர முயற்சி செய்வதில்லை.. திடீரென்று இறைவனை உணர முடியாது. அதற்கு தியானம் செய்ய வேண்டும். அதிலிருந்துதான் மனம் மாறவேண்டும். சம்சாரமே குறிக்கோளுடையவராக இருந்தால் எப்படி தியானம் செய்ய மனம் வரும்.

நெருங்கிய உறவதாக இருந்தாலும் சரி அது மகனோ அல்லது மகளோ ஆனாலும் அவர்கள் இறைவனை உணர்ந்தால் மட்டும்தான் உடனிருக்கும் உறவுகளிடத்தில் அன்பை வெளிப்படுத்தமுடியும் இல்லையேல் சண்டைதான் நடக்கும். நெருங்கிய உறவாக இருந்தாலும் அங்கே உண்மையான அன்பு இல்லையென்றால் அவர்களிடத்தில் இறைவனை உணர்ந்தவன் வசிப்பது பரிசயமில்லாதவர்களிடம் வசிப்பது போன்றாகிவிடும். அதே சமயம் பரிசயமே இல்லாதவர்களுடன் ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அங்கே அன்பு நிறைய இருக்கும் என்றால் அவர்கள்தான் உண்மையான உறவுகள்.

ஒருவனுக்கு எவ்வளவு படிப்பறிவு இருந்தாலும், ஆன்மாவைப்பற்றிய அறிவில்லை, அல்லது ஆன்மாவைப்பற்றிய அறியாமை இருக்கும்வரையில் எவ்வளவு பெரிய பி.எச்.டி பட்டம் பெற்றிருந்தாலும் அவர்களுக்கு எதுவுமே தெரியவில்லை என்று தான் கூறவேண்டும். அந்த அதிகப்படியான படிப்பறிவு இருக்கும் நபரின் கர்மா ஆன்மாவைப்பற்றித் தெரிய விடாமல் செய்யும். அதற்கு என்ன காரணம் என்றால் மாயைதான். அவன் தினமும் காலையிலும் மாலையிலும் தியானம் செய்பவனாக இருந்தால், மாயை அவனைவிட்டு தள்ளித்தான் நிற்கும். மாயை என்பது ஒரு பிசாசு போன்றது. அதுதான் மனம். அதனால் விடாமல் தியானம் செய்தால் மாயை நம்மை தொடாது. அதனால் பல்வேறு நன்மைகள் உள்ளன. மாயை என்னும் பிசாசு நம்மைத் நெருங்காது. வேறு எந்தத் தீயதும் நம்மை நெருங்காது.

உறவினர்களிடத்தில் சுயநலம், பேராசை போன்றவை இருக்குமென்றால் அது அவர்களிடத்திலுள்ள அன்பு தூய்மையாக இல்லை என்பதை நாம் அறியலாம். ஓர் இறை பக்தனுக்கு உண்மையான அன்பு இருக்கும். அவன் அதை வெளிப்படுத்தினாலும் மற்றவர்களுக்குத் தெரியாது. தம்மிடத்தில் தூய அன்பு இல்லாததால்தான் இறைபக்தனின் அன்பைப்பற்றி அவர்கள் தெரியமாலிருக்கிறார்கள். உண்மையான ஓர் இறைபக்தனுக்கு இறைவன் தெரிவித்து விடுவான்.

சுய நலமுள்ளவர்களுக்கு இறை பக்தனுடைய அன்பைப்பற்றி தெரியாது. அதை இறைபக்தனுக்குத் தெரிவிப்பதும் இறைவனே! இவற்றையெல்லாம் இறைவன் தெரிவிப்பது ஏதற்கெனில், நெருங்கிய உறவினர்களிடத்தில் இருக்கும் பற்றினை அறுத்துவிட இது ஒரு வாய்ப்பு. இப்படிப்பட்ட வாய்ப்பினைத் தருவதும் இறைவன்தான். இந்நிலையிலிருக்கும் உறவினர்களிடத்திலுள்ள பற்றினை அறுத்து அவன் தன் மனமாகின்ற படகினை இறைவனிடத்தில் திருப்புவான். இறுதியில், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது அவனுக்கு இறைவன் பக்கம் செல்வதற்கு அருள் செய்கிறான் இறைவன். அதனால்தான் அவனைச் சுற்றியிருக்கும் உறவினர்களை அவர்களிடத்தில் இறை அன்பன் வைத்திருக்கும் பற்று அறுத்து விடுவதற்காகத்தான் அவர்களை அம்மாதிரியான குணங்களுடன் இறைவன் படைத்துள்ளான். எனவே இது ஒரு நன்மைதான். இந்த சம்சாரக்கடலிலிருந்து விடுபட வேண்டுமென்றால் யாரிடத்திலும் பற்று இருக்கக்கூடாது. உலகப்பொருள் பற்றிலிருந்தும் உறவினர்கள் பற்றிலிருந்தும் விடுபடவேண்டும். அதற்குப் பதிலாக உறவினர்கள் எவ்வளவு சுயநலமாக இருந்தாலும் அகந்தையுடனிருந்தாலும் அவர்களுள்ளும் இறைவன்தான் இருக்கிறான் என்பதை கருத்தில் கொண்டு அவர்களிடத்தில் அன்பாக இருக்கத்தான் வேண்டும். அதுதான் தெய்வீக அன்பு. அந்த அன்பானது அவர்களையும்



குருப்ரியா






பிற்காலத்தில் மாற்றிவிடும். அப்போது அவர்களும் இறைவனை நினைக்க வழிவகை பெறுவர். ஒருவர் இறைவனை நினைத்து வழிபட்ட இடத்தில் அவருடன் இருக்கும், பத்து அல்லது பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இறைவனை வழிபட ஆரம்பித்தால் அவ்விடம் எவ்வளவு ஒளிரும் என்பதை நினைத்துப்பார்க்கக்கூட முடியாது. அவ்விடம் இறை அருள் சூழ்ந்த இடமாக அமையும் .

இவ்வாறு ஒவ்வொருவரும், உலக வியாபாரங்களிலிருந்து மனதைத் திருப்பி இறைவனிடத்தில் நங்கூரமிட்டு, குருதேவர் கூறியுள்ளவாறு இறைவனுடன் இருப்பதுதான் மிகவும் நன்று. அது எல்லாவிதத்திலும் நன்மையைத் தரும். எனவே குருதேவரின் அன்பான போதனைகளை நன்கு அறிந்து, பின்பற்றி வாழ்ந்தால் எல்லா வகையிலும் மனிதனுக்கு பாதுகாப்பு உண்டு என்பது உறுதி.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

ஆன்மீகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com






# கண் திறந்த மகாலட்சுமி

சென்னை கோடம்பாக்கம், பாரதீஸ்வரர் காலனி 5வது தெருவில் உள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் மார்கழி மாத விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

மார்கழி மாதம் முழுவதும் காலையில் பக்தி பாடல்கள் இசைத்து வீதிவுலா தொடர்ந்து நடைபெற்றது. இந்த ஆலயத்தில் விநாயகர், சாய்பாபா, பெருமாள், ஆண்டாள், மகாலட்சுமி, அனுமன், விநாயகர் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆலயத்தில் அனுமன் ஜெயந்தி, ஆண்டாள் திருக்கல்யாணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த ஆலயத்தில் 24.12.2020 அன்று காலையில் கோவில் திறப்பின் போது, இங்கு வீற்றிருக்கும் மகா லட்சுமி விக்கிரகத்தின் கண்கள் திறந்தது போன்று காணப்பட்டது. (படத்தில் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது). இந்நிகழ்வு சிறிது நேரம் பெரும் பரபரப்பை ஏற் படுத்தியது. பலர் இந்நிகழ்வை கண்ணார பார்த்து ரசித்தனர். சிறிது நேரம் காணப்பட்ட இந்நிகழ்வு மெல்ல மறைந்ததாக கூறப்படுகிறது. இந்த நிகழ்வை ஒருசிலர் புகைப்படம் எடுத்ததை நமது இதழில் பிரசுரித்துள்ளோம்.

இதுகுறித்து இவ்வாலயத்தின் அர்ச்சகர் கிருஷ்ண குமார் (தொடர்பு எண்: 9566190061) கூறுகையில் இந்த ஆலயம் மிகவும் சக்தி வாய்ந்த ஆலயமாகும், விநாயகரிடம் வேண்டும் வேண்டுதல் நிறைவேறும், இவ்வாலயத்தில் அனைத்து விஷேசங்களும் வெகு விமரிசையாக நடைபெறுகிறது என்று தெரிவித்தார்.











# இரண்டு வகையான தீபங்கள்

காலை எழுந்தவுடன் தனது உள்ளங்கைகள், பசு, கோவில் கோபுரம், இறைவனின் திருவுருவப் படம் இவற்றை பார்க்கவேண்டும்

தினசரி விளக்கேற்றுவது சிறப்பு. செவ்வாய் மற்றும் வெள்ளிகளில் 5 முகம் கொண்ட விளக்கேற்றுவது இன்னும் சிறப்பு.

விளக்கை அமர்த்துதல் அல்லது மலையேற்றுதல் என்று தான் சொல்லவேண்டும். 'அணைப்பது' என்ற வார்த்தையை உபயோகிக்கவே கூடாது. அது அமங்கலச் சொல்லாகும்.

விளக்கை தானாக மலையேற விடக்கூடாது, ஊதியும் அமர்த்தக்கூடாது. புஷ்பத்தினாலும் மலையேற்றக் கூடாது. அப்போ எப்படித் தான் சார் மலையேற்றுவது என்று தானே கேட்கிறீர்கள்? தீபத்தை எப்போதும் கல்கண்டை கொண்டு தான் அமர்த்தவேண்டும்.

தீபம் நல்ல காரியங்களுக்கும் பயன் படுத்தப் படுகிறது. கெட்ட காரியங்களுக்கும் பயன் படுத் தப்படுகிறது.

நல்ல தீபம் போடுவது எப்படி அசுப தீபம் போடுவது எப்படி என்று தெரியுமா சுபகாரியங் கள் செய்யும் பொழுது முதலில் சுத்தமான என்னையைய் விளக்கினுல் உள்ளே ஊத்த வேன்டும் பிறகு தான் சுத்தமான திரி உள்ளே நனைத்து அதன் பின் தீபம் ஏற்ற வேன்டும்

தீபம் ஏற்றும் போது ஒருதடவை எதாவது நல்ல மந்திரம் உச்சரித்து கொன்டு தீபம் ஏற்றும் பொழுது ஒரு லட்சம் முறை மந்திரம் சொன்ன பலன் கிடைக்கும்.

கெட்ட காரியம் அதாவது (யாராவது இறந்து விட்டால்) முதலில் திரியைய் வைத்து அதன் பிறகு தான் என்னையைய் ஊற்ற வேன்டும் அதன் பின்தான்தீபம் ஏற்ற வேன்டும் ஏற்றிய தீபத்தை சுடுகாட்டுக்கு மரணித்தவரின் உடலை தூக்கி சென்றவுடன் அந்த தீபத்தை முச்சோந்தியில் போட்டு உடைத்து விட வேன்டும்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com





# வேலவனின் சிறப்புகள்

1. ஆறுமுகம்: ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம் என்ற ஐந்துடன் அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகமானது.
2. குகன்: குறிஞ்சி நிலத் தெய்வம், மலைக் குகைகளில் கோயில் கொண்டதால் குகன்.
3. குமரன்: மிக உயர்ந்தவன், இளமையை எப்போதும் உடையவன், பிரம்மச்சாரி ஆனவன்.
4. முருகன்: முருகு அழகு என்று பொருள், எனவே முருகன் ஒப்புமையற்ற பேரழகன்.
5. குருபரன்: கு அஞ்ஞான இருள், ரு நீக்குபவர், ஆன்மாக்களின் அறியாமை இருளை அகற்றுபவன் குரு சிவனுக்கும், அகத்தியருக்கும், அருணகிரிக்கும் குருவாய் நின்று பிரணவத்தை உபதேசிப்பவன் குருநாதன்.
6. காங்கேயன்: கங்கையின் மைந்தன்.
7. கார்த்திகேயன்: கார்த்திகைப் பெண்களால் வளர்ந்தவன்.
8. கந்தன்: கந்து யானை கட்டும் தறி. கந்தன் ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாய் இருப்பவன். பகைவர் வலிமையை அழிப்பவன் ஸ்கந்தன். தோள் வலிமை மிக்கவன். ஆறு திருமேனியும் ஒன்றானவன்.
9. கடம்பன்: கடம்ப மலர் மாலை அணிந்தவன்.
10. சரவணபவன்: சரம் நாணல், வனம் காடு, பவன் தோன்றியவன், நாணல் மிக்க தண்ணீர் உடைய காட்டில் தோன்றியவன்.
11. ஸ்வாமி: ஸ்வம் சொத்து, எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும் சொத்தாக உடையவன். சுவாமி என்ற பெயர் முருகனுக்கு மட்டுமே உரியது. சுவாமி உள்ள மலை சுவாமி மலை.
12. சுரேஷன்: தேவர் தலைவன் சுரேசன்.
13. செவ்வேள்: செந்நிறமுடையவன், ஞானச் செம்மை உடையவன்.
14. சேந்தன்: செந்தழல் பிழம்பாய் இருப்பவன்.
15. சேயோன்: சேய் குழந்தை, குழந்தை வடிவானவன்.
16. விசாகன்: விசாக நட்சத்திரத்தில் ஒளியாய் உதித்தவன்.
17. வேலவன், வேலன்: வெல்லும் வேல் உடையவன், அறிவாக, ஞான வடிவாக விளங்கும் வேல், கூர்மை, அகலம், ஆழம் என்னும் மூன்றும் உடையது.
18. முத்தையன்: பிறப்பிலேயே முத்து ஒளியுடையது. மற்ற மணிகள் பட்டை தீட்டினால் தான் ஒளிரும். எனவே இயல்பாகவே ஒளிர்பவன் முத்தையன்.
19. சோமாஸ்கந்தன்: ச உமா ஸ்கந்தன்: சிவன் உமை முருகன்; சத்து சிவம், சித்து உமை, ஆனந்தம் கந்தன், முருகன் ஆனந்த வடிவானவன்.
20. சுப்பிரமணியன்: சு மேலான பிரம்மம் பெரிய பொருளிலிருந்து, நியம் தோன்றி ஒளிர்வது. மேலான பெரிய பிரம்மத்தில் இருந்து தோன்றி ஒளிர்பவன்.
21. வள்ளற்பெருமான்: முருகன், மண்ணுலகில் அவதரித்த வள்ளி இச்சா சக்தி மூலம் இக நலன்களையும், விண்ணுலக மங் கை தெய்வானை கிரியா சக்தி மூலம் பரலோக நலன்களையும், வேலின் மூலம் ஞானசக்தியையும் ஆகிய மும்மை நலன்களையும், முக்தி நலன்களையும் வழங்குகிறார்கள்.
22. ஆறுபடை வீடுடையோன்: மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறாதாரங்களை ஆறுபடை வீடுகளாய் உடையவன்.



23. மயில்வாகனன்: மயில் ஆணவம், யானை கன்மம், ஆடு மாயை இந்த மூன்றையும் அடக்கி வாகனமாய் கொண்டவன்.
24. தமிழ் என்றால் முருகன். முருகன் என்றால் தமிழ். இரண்டையும் பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்தே இருக்கும். உதாரணமாக 12 உயிரெழுத்து என்பது முருகனின் 12 தோள்களை குறிக்கும். 18 மெய்யெழுத்து என்பது முருகனின் 18 கண்கள் (முருகன் சிவனது நெற்றிப் பொறியிலிருந்து தோன்றியவர் என்பதால், இவரது ஒவ்வொரு முகத்திலும் இவருக்கும் நெற்றிக்கண் உண்டு) 6 இன எழுத்து என்பது 6 முகங்களை குறிக்கும். ஃ என்ற ஆயுத எழுத்து வேலை குறிக்கும். இந்த வேலை வணங்குவதையே வேலையாக கொண்டால் வாழ்வில் சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics செல்: +91-8825844033

www.aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
09444228203

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

# நம்மை கட்டுப்படுத்துகின்ற சிந்தனை

ஒரு கொள்கையை கட்டாயமாக புத்திக் குள் திணிக்கும்பொழுது இரத்த அழுத்தமும் கடினத்தன்மை யும் மூளையைத் தொடும்பொழுது அந்த தன்மையே பிறகும் நம்மிடம் உள்ள நரம்பு மண்டலத்தை பாதிக்கிறது. இத்தகைய முறையினைத் தவிர்த்து விடலாம். படிப்பு சொல்லிக் கொடுப்பது என்பது ஒரு தனிப் பட்ட கலை. பாடங்களை எல்லாம் தலையிலே திணிக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது.

❖❖❖

எது எவ்வண்ணம் இருந்தாலும் முழு அறிவு என்ற ஞானம் தலையில் திணிக்கப்பட்டே ஆக வேண்டும். இதை வழிமுறையோடு போதிப்பது முக்கியமாகிறது. பாடங்களை சிறிது சிறிதாக ஒரு மனித னின் புத்திக்குள் வைக்க முயலும்போது அது தொட்டால் உடனே நைந்துவிடும் என்பதைப் போன்ற ஒரு துல்லியமான கொடிக்கும், முளைத்து வரும் முளைக்கும் தண்ணீர் விடுவதைப் போன்றதே. உலகில் இப்படிப்பட்ட தன்மை நடந்து கொண்டு தான் இருக்கிறது. இதை செய்யும் பொழுது குருவோ அல்லது பேராசிரியரோ கட்டாயம் தனது மாணவர்களின் தன்மையை அறிந்து அளந்து தொழில்பட வேண்டும்.



❖❖❖

இத்தகைய வழிமுறைகள் திடீர் என்ற நினைவு முறையாக திணிக்கும் தன்மையினைக் கொண்டு சமய சம்பந்தமான படிப்புகளுக் கெல்லாம் உலகத்தில் பல சமயங்களுக்குள் இருக்கின்றன. ஒரு வகையில் இத்தகைய பண்பு மனிதர்களுக்கு நல்லது செய்வதாகவே அமைந்திருக்கிறது. ஆனாலும் இத்தன்மை ஒரு கானல்நீரின் வடிவத் தைக் கொண்டதே. கானல்நீர் வடிவத்தைக் கொண்ட மாயையாக மதபாடங்களையும் போதனைகளையும் படிக்கின்ற மாணவர்களின் சிந்தனை ஒருமுகமாகவே செல்லும். இது எப்படி இருக்கின்றது தெரியுமா? கடிவாளம் போட்ட குதிரை வண்டியை இழுத்துக் கொண்டு ஓட்டுகின்ற திக்கில் மட்டும் ஓடுவதைப் போன்றே இருக்கிறது.

❖❖❖

திணிக்கப்படக்கூடிய கொள்கை யின் தன்மையும் அதன் ஒரே நிதானமான பலனும் ஒரு பாதையில் ஓடிச் செல்லுகின்ற சிந்தனையாகவே இருக்கிறது. ஒருவழிப்பாதை சிந்தனையை மக்கள் உடனடியாக தவிர்க்க வேண்டும்.

❖❖❖

ஒரு கொள்கையை புத்தியில் தொடர்ந்து திணிக்கும்பொழுது அது புத்தியில் எந்த ஒரு பகுதியிலும் அப்படியே நிற்பதில்லை. பின்னும் அது என்ன செய்கிறது தெரியுமா? அக்கொள்கை புத்தியில் ஏதாவது ஒரு மையம் கொண்டு அந்த நிலைத்த இடத்திலிருந்து மூளையின் பல பகுதிகளுக்கு சிறு சிறு கிளைகளாக நரம்பு கேந்திரத்தின் வழியாக பிரிகிறது. இதுபோல ஒருவழிப்பாதை தங்களது நல்ல பாதையாக கொண்டு உலகில் எல்லா கலைகளும் தங்களுக் குள் வந்து சேரும்படியாக சிலர் படிக்கிறார்கள். சிற்சில சமயங்களில் மேலே சொன்ன தன்மை உதவுகிறது.

❖❖❖

முற்றிலும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற ஒரு திடீர் சிந்தனை நமக்கு வருமானால் அதுவும் நம்மை கட்டுப்படுத்துகின்ற சிந்தனையே. இவ்விடத்தில் திணிக்கப்படுகின்ற கொள்கை முறை நம்முள் புகுந்து நமக்கு சுதந்திரத்தையும் அதையே பிறருக்கு போதிக்கின்ற தன்மையாகவும் சொல்லி கொடுத்து நல்லதை தந்து நம்மை சிந்திக்கவும் வைக்கிறது.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள் •
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# கடவுள் உருவாக்கிய மதம்

அன்பை நிலை நாட்டுவதற்கு உருவானது தான் மதங்களாகும். எந்த மதமும் வன்கொடுமையை வலியுறுத்தவில்லை. ஆனால் மதங்களின் பெயரால் தான் வன்முறைகள் இன்று பரவலாக நடந்து வருகிறது. அதற்கு காரணம் என்ன? அன்பை போதிக்கும் மதங்களால் அராஜகங்கள் நிகழ்வது ஏன்? என்று ஆயிரம் ஆயிரம் கேள்விகள் கேட்டாலும் கிடைக்கும் பதில் ஒன்றுதான். மதங்களை தவறுதலாக புரிந்து கொள்வதும் என்மதம் தான் உயர்ந்தது என்று மற்ற மதங்களை ஊதாசினப்படுத்தும் மனப்போக்கும் தான் மத வன்முறைகளின் ஊற்றுக் கண்ணாக இருக்கிறது என்ற பதில் கிடைக்கும்.

மத வெறியையும் மத அறியாமையையும் நீக்குவதற்கு என்ன வழி என்று மக்களை நேசிக்கும் மனித நேயமிக்க சிந்தனையாளர்கள் பலரும் தங்களது அறிவாற்றலைக் கொண்டு ஆராய்ந்து வருகிறார்கள். அவர்களின் சிந்தனைக்கு உரமாகவும் சீர்திருத்தத்திற்கு வழியாகவும் எனக்கொரு யோசனை தோன்றியது அந்த யோசனையின் விளைவுதான் இந்த தொடர் பதிவாகும்

மதப்பிரச்சாரம் என்பது நமது நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் நடைபெற்று வரும் ஒரு விஷயமாகும். ஆனால் அந்த பிரச்சாரம் எந்த நோக்கில் அமைந்திருக்கிறது என்றால் ஒன்றை தாக்கியும் இன்னொன்றை போற்றியும் தான் அமைந்திருக்கிறது. இதில் தான் சிக்கல்களும் பிரச்சனைகளும் முளைவிடுகின்றன. எனவே அந்த மதப்பிரச்சாரத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இதில் இன்னொரு விஷயத்தையும் மிக முக்கியமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுவாக இன்றைய மதப்பிரச்சாரம் என்பது சுய மதத்தினரிடம் அல்லாமல் மாற்று மதத்தினரிடம் தான் அதிகப்படியாக நடத்தப்படுகிறது.

எனவே காழ்புணர்ச்சி அற்ற வகையி லும் சுய மதத்தினரே தங்களது மதக் கருத்துகளை நன்கு புரிந்துணரும் வகையிலும் நமது நோக்கம் அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் மதங்களில் புகுந்திருக்கும் வெறியுணர்ச்சியை கட்டுப்படுத்த முடியும். ஆகவே அந்தந்த மத அறிஞர்கள் தங்கள் மக்களுக்கு தம்தமது மதக்கருத்துகளை புரியும் வண்ணம் போதித்து மாற்று மதத்தினரையும் நேசிக்க கற்றுக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மதங்களின் மீது பதிந்திருக்கும் வன்முறை என்ற கொடிய பாவம் கழுவப்படும்.




சில நாட்களுக்கு முன்பு இஸ்லாம் மதத்தை சார்ந்த ஒரு அன்பரை நான் சந்திக்க நேட்டது. அவர் பல விஷயங்களைப் பற்றி என்னிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு கடைசியாக மதசம்பந்தப்பட்ட சில கேள்விகளை என்னிடம் கேட்டார். அந்த கேள்விகளில் மிகவும் முக்கியமானது இந்துக்களாகிய நீங்கள் சிலைகளை வழிபடுவது ஏன்? பல கடவுள்களை நம்புவது ஏன்? என்பதாகும். அவருக்கு நான் இந்துக்கள் உருவ வழிபாட்டை கடைபிடிப்பதன் காரணத்தையும் கடவுள் கொள்கைகளையும் விளக்கமாக எடுத்துச் சொன்னேன். அந்த விளக்கங்களில் அவர் எந்த வகையிலும் திருப்தி அடையவில்லை. பொத்தாம் பொதுவாக கல்லை வணங்குவது தவறு என்பதில் பிடிவாதமாக இருந்தாரே தவிர நான் சொன்ன கருத்துகளை புரிந்து கொள்ள எந்த முயற்சியுமே எடுக்காமல் கண்மூடித்தனமாக தான் பேசுவதையே பிடித்துக் கொண்டு நின்றார்.




இத்தகைய பிடிவாதக் காரர்களிடம் வாதம் செய்வது என்பது மலையின் முன்னால் பேசுவதற்கு ஒப்பானதாகும். நமது பேச்சு நம் காதில் விழுமே தவிர மலையை எந்த வகையிலும் பாதிக்காது அதனால் அவரிடம் வேறு சில காரியங்களை பேசி அனுப்பி வைத்து விட்டேன். இப்படி மற்றவர்களின் கருத்துகளை காது கொடுத்து கேட்காதவாறு பல மனிதர்கள் உருவாக்கப்பட்டு நடமாட விடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களின் கருத்துகளை மட்டுமல்ல மன உணர்வுகளையும் புரிந்து கொள்வது இல்லை.

சரி ஒரு இஸ்லாமியன் இந்து மதத்தை புரிந்து கொண்டு விடுவதினால் பல நன்மைகள் உண்டு என்றாலும் கூட புரிந்து கொள்ளாமல் போவதனால் பெரும் பாதிப்புக்கள் எதுவும் ஏற்பட்டு விடப்போவதில்லை. ஆனால் ஒரு இந்து தனது மதத்தை தெரிந்து கொள்ளாமல் போவதனால் நிச்சயம் பல பாதிப்புகள் ஏற்பட்டே தீரும் அந்த பாதிப்புகள் நமது நாட்டின் ஆத்மாவை அழிப்பதாகவே அமைந்து விடும்.

**மிக வேதனையான ஒரு விஷயத்தை நாம் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். இந்துக்கள் என்று கூறிக்கொள்ளும் எத் தனை பேருக்கு தங்களது மதத்தைப் பற்றிய அறிவும் தெளிவும் இருக்கிறது. என்னால் சர்வ நிச்சயமாக அறுதியிட்டு கூறமுடியும் நம்மில் நூற்றுக்கு பத்து பேருக்கு கூட நம் மதத்தைப் பற்றி துளி அளவும் ஞானமில்லை என்று. சரி நம்மவர்கள் ஞானம் இல்லாமல் போன தற்கு அவர்கள் மட்டும் தான் காரணமா என்று கேட்டால் நிச்சயம் அவர்களை மட்டுமே குற்றவாளிகள் என்று கூறி விட முடியாது. சமயத்தை மக்கள் மத்தி யில் பரப்ப வேண்டிய ஆச்சாயர்களே தங்க ளது பணிகளை திறம்பட செய்யாத குற்ற வாளிகள் என்று கருத வேண்டும்.**

புவியியல், பொறியியல் என்று படிப்பதனால் வேலை கிடைக்கிறது. வருவாய் வருகிறது. வயமும் நிறைகிறது. மதத்தை பற்றிய அறிவை பெறுவதினால் என்ன கிடைத்து விடப்போகிறது உலக வாழ்க்கைக்கு உதவாத மத அறிவு தேவையே இல்லை. என்று சிலர் நினைக்கிறார்கள் இவர்கள் நிச்சயமாக புத்திசாலிகளாக இருக்க மாட்டார்கள் என்பதே எனது கருத்தாகும். ஒரு மனிதன் வாழ்வதற்கு ஆகாரம் மட்டுமே போதுமானது என்றால் மனிதனையும், மிருகத்தையும் சமமான தரத்திலேயே வைத்துவிடலாம். மிருகத்திலிருந்து மனிதனை வேறுபடுத்தி உயர்த்தி காட்டுவது பகுத்தறிவோடு கூடிய பண்பாட்டு செறிவாகும். பண்பாடு தெரியாத எந்த மனிதனும் அமைதியாக வாழ்ந்து விடமுடியாது. மதம் என்பதும் மனிதனை பண்படுத்தும் பண்பாடு தான். இன்னும் சொல்வதென்றால் மதத்திலிருந்து தான் பண்பாடே தோன்றியது எனலாம்.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

கடிவாளம் இல்லாத குதிரை நாலா திசையும் ஓடி ஆடி வீணாக அலைவது போல் ஒழுக்க நெறி யில்லாத மனிதனும் தனது வாழ்நாளை வீணாக்கி கொள்கிறான். எனவே மனிதன் தான் அமைதியாக வாழவேண்டும் என்ற சுயநல காரணத்திற்காவது மத அறிவை பெற்றே ஆகவேண்டும். அப்படி பெற மறுத்தால் காற்று போன போக்கில் காற்றாடி பறந்து கிழிந்து கிடப்பது போல் நமது வாழ்க்கையும் கிழிந்து போய்விடும்.

நமது ஜனங்கள் மத அறிவை பெறாமல் இருப்பதற்கு அவர்களின் அசட்டை மட்டும் காரணமல்ல ஆச்சாயர்களின் கவனக் குறைவும் காரணம் என்று முன்பே சொன்னேன். அது நான் வேடிக்கைகாக கூறியது அல்ல வேதனையோடு கூறியது ஆகும். நமது சங்கராச்சாயர்களும், ஜீயர்களும், பட்டர்களும் தங்களது பார்வைகளை விசாலப்படுத்தாமல் ஒரு சிறு குழுக்களின் மீது கவனம் செலுத்தி பெருவாரியான ஜனங்களை தங்களது ஞானத்தால் வழிநடத்தாமல் போனதே மிகப்பெய குற்றமாகும். மடாதிபதிகள் என்பவர்கள் மக்களின் பணியாளர்களே தவிர இறைவனின் அவதாரங்கள் அல்ல. இவர்கள் தங்களை அவதார புருஷர்களாக கருதிகொண்டதனால் ஏற்பட்ட சோகமே நம்மக்களின் தோல்விகளாகும். மன்னர்களின் மானியங்களை திருமடங்களின் கருவறைக்குள் பாதுகாத்து வைக்கும் சிறத்தையை விட்டுவிட்டு மதக்கருத்துகளை மன்னவனுக்கு மாடு மேய்க்கும் சின்னவனுக்கும் சொல்லியிருப்பார்களே யென்றால் இன்றைய அவல நிலை ஏற்பட்டிருக்காது.

கிறிஸ்துவம், இஸ்லாம் போன்ற மத அமைப்புகளில் ஒரு நடைமுறை இருக்கிறது. அது என்ன வென்றால் தங்களது மதத்தைச் சார்ந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட வயது வரை மதக்கல்வி அளிப்பது ஆகும். அந்த நடைமுறை நமது இந்து மதத்தில் எந்த பகுதியிலும் இல்லை அதனால் தான் நம் மதத்தின் புனித நூல் எது என்று கூட அறியாத பலர் இன்றும் இருக்கிறார்கள். இந்த நிலைமை இன்னும் தொடர்ந்தால் வருங்காலத்தில் நம் மதத்தின் அறிவுக் கருவூலங்கள் எது என்பதே தெரியாத வன்னம் அழிந்து போகக் கூடிய துயர நிலை ஏற்பட்டுவிடும். இதை மாற்ற உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தே ஆகவேண்டும்.

அடுத்த இதழில்...

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434






இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்


















தைமாதம் தரிசிக்கவேண்டிய திருக்கோவில்

## மூலவரின் சக்தியை கொண்ட உற்சவர்,

## புதிய தொழில் வணிகத்தின் அதிபதியான முருகனால் மிகப்பெரிய வணிக மையமாக மாற்றப்பட்ட பாரிமுனை,

## 1000 ஆண்டுகள் பழமையான திருக்கோவில்,

# கந்த கோட்டம் முருகன் கோவில்

சென்னையின் மிகப்பெரிய வர்த்தக இட மான பாரிமுனையில், அரிய சக்தி வாய்ந்த முருகன் கோவில் உள்ளது. இத் தலத்து முருகன் சிதம்பரசாமி, பாம்பன் குமரகுருபரதாச சுவாமிகள், இராமலிங்க அடிகளார் போன்றோரின் மிக விருப்பமான முருகனாவார், இத்தலம் சுமார் 1000 வருடங்கள் பழமையானதாக உள்ளது.

இத்தலத்து முருகனின் சிறப்புகள் பல இருந்தாலும், இத்தலத்தில் மூலவருக்கு உள்ளது போன்றே உற்சவருக்கும் சக்தி அதிகம்.

தமிழகத்தில் உள்ள எந்தக் கோவிலிலும் இல்லாத சிறப்பாக மூலவருக்கு இணையாக இத்தலத்தில் மட்டும் உற்சவரும் அருள்புரிந்து வருகிறார்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத் திலிருந்து 5 நிமி நடைபயணத்தில் அமைந் துள்ள "கந்த கோட்டம்" முருகன் கோவிலில் அமைந்துள்ள உற்சவரைப் பற்றி பார்ப்போம்.

ஒரு சமயம், முருகனடியார்கள் ஒன்று கூடி, நம் கோயிலுக்கு உற்சவ விக்ரகம் கண்டிப்பாக உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

சிற்ப சாஸ்திர வல்லுணர்களின் திறமைசாலிகளைச் சலித்தெடுத்து, மிக நுடபறிவு கொண்ட ஒருவரை தேர்வு செய்தனர். சிற்ப சாஸ்திரரிடம், உற்சவ முருகனாக பஞ்ச லோகத்தில், விக்ரகம் ஒன்றை வார்த்து தரும்படி ஒப்படைத்தனர்.

சாஸ்திரரும் புடம்போட்டு எடுத்தபின், வார்ப் படத்தை பிரித்த போது, விக்ரகம், 'மினு மினு' வென மின்னியது, அதன் ஒளிச் சிதறல்கள் கண் களைக் கூசச் செய்தது.

ஆனால், வார்ப்படத்திலிருந்த பிரித்தெடுத்த பகுதிகள் பூராவும் முட்கள்போல சிறு பிசிறுகளாய் இருந்தன.

கோயில் பொறுப்பாளர்கள் அனைவருமாக சேர்ந்து, சிற்பசாஸ்திர முதன்மையாளரிடம்,... சிற்பம் நல்லா வந்திருக்கிறது. ஆனால், வெளித் துருத்தியிருக்கும் முட்கள் போலான பிசிறுகளை நீக்கினீர்களென்றால், சிற்பம் இன்னும் அழகாக இருக்கும் என்றனர்.

தலைமை சிற்பியும், சரி! துருத்திய பிசிறுகளை எல்லாம் சுத்தப்படுத்தி தருகிறேன் என்று சொல்லி, அதற்குண்டான கருவியுடன் விக்ரகத்தை தொட்டார்.

அவ்வளவுதான்.......

சிற்பத்தை தொட்ட மாத்திரத்தில், மின்சாரம் தாக்கியவர்போல், தூரப் போய் விழுந்தார்.

பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்து, சிற்ப சாஸ்தகரை தூக்கி வைத்து ஆசுவாசப் படுத்தி... "என்ன ஆனது!" ஐயா என்று கேட்டனர்.

என் தேகமெல்லாம் மின்சாரம் பாய்ந்தது போலிருக்கிறது. ஒரே பதட்டமாக இருக்கிறது வாய் குழறி குழறிக் கூறினார். சிறிது நேரத்திற்குப் பிறகு தெளிந்து எழுந்த சிற்பி, கண்களில் மிரட்சி யோடு ஆலயப் பக்தர்களை நோக்கி கைகளைக் கூப்பி...

இந்த விக்ரகம் நீறு பூத்த அணலாக இருக் கிறது. இதைச் சுத்தத் தூய்மையாக்கும் சக்தி என்னிடம் இல்லை. என்னை விட்டு விடுங் கள், இது என்னால் இயலாது என்று கூறி போய் விட்டார்.

பிசிறுகளுடன் இருக்கும் உற்சவ விக்ரகத்தை தீண்டப் பயந்து, வழிபாட்டுக்கு எடுத்துக் கொள் ளாமல், விக்ரகத்தை ஒரு அறையில் இருந்தவாரே பாதுகாப்பாக வைத்து பூட்டி விட்டனர்.

இந்தச் செயலுக்குப் பின்பு, இரண்டு ஆண்டுகளும் கடந்து போய்விட்டன.

ஒருநாள், காசியில் இருந்து சாம்பையர் எனும் துறவி, கந்தகோட்டத்து முருகனைத் தரிசிக்க ஆலயத்திற்குள் புகுந்தார்.

அவர் மூலவரைத் தரிசித்த பின், ஆர்வத்தோடு உற்சவர் இல்லையா? எனக் கேட்டார்.

சிவாச்சாரியாரும், விக்ரகம் வார்ப்பெடுத்து உருவான விபரம் முதல், அனைத்தையும் சாம்பை யரிடம் கூறிவிட்டு, ஆலய முக்கியஸ்தரரிடம்

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com



கீதா-ராஜன்

அழைத்துப் போய் கொண்டு விட்டு விட்டார்.

இதன்பின், கோயில் நிர்வாகிகளைச் சந்தித்த சாம்பையர், அந்த உற்சவ விக்ரகத்தை நான் பார்க்கலாமா? என்றார்.

சாம்பையருடைய தோற்றக்கோலத்தைக் கண்டு கட்டுப்பட்ட நிர்வாகிகள், உற்சவர் இருந்த அறையைத் திறந்து விட்டனர்.

அறைக்குள் நுழைந்த சாம்பையர், சில நிமிடத்தில் வெளியே வந்தார்.

அப்போது அவர் உடல் சிலிர்த்த வண்ண மிருந்தது. இதை, ஆலய நிர்வாகிகளும் கூடி யிருந்த பக்தர்களும் கண்கூடாகப் பார்த்தனர்.

சாம்பையர், கூடியிருந்த அனைவரையும் பார்த்து, நீங்கள் அனைவரும் பாக்கியசாலிகள்! என்றார்.

நாங்கள் பாக்கியசாலிகளா?, எங்களுக்கு, நீங்கள் என்ன சொல்ல வர்றீங்க!. விபரமா சொல்லுங்க சாமி என்றனர் அனைவரும்.

இக்கோயிலில் உள்ள மூலவருக்குஎவ்வளவு சான்னித்தியம், இருக்கிறதோ, அதே சான்னித்தியம் இந்த உற்சவ மூர்த்தத்திலும் பொதிந்திருக்கிறது என்றார்.

விக்ரகம் இவ்வாறு அமைவது வெகு அபூர்வமானதுதான். இங்கு இது அமையப் பெற்றதனால்தான் உங்களை நான் பாக்கியசாலி என்றேன் என்றார்.

தன்னை வழிபடும் அடியார்களுக்கு மூலவரைப்போல், இந்த உற்சவரும் அளவிலா அருட் செல்வத்தை வழங்குவார் இவர்.

இவரை வணங்கி, தியானம், ஆராதனை செய்யலாமே தவிர, இவர் திருமேனியில் எந்த விதமான கருவிகளும் படக் கூடாது என்றார்.

ஆகையால் இந்தத் தன்மை கொண்ட உற்சவ விக்ரகங்களை ஆத்ம சக்தியால் மூலம் தூய்மைப் படுத்த முடியும்.

இதைத் தெரியாது தவிர்த்து, ஆயுதத்தால் தீண்டித் தொட முனைந்தால், அது நடவாது போய்விடும்.

எனவே, இந்த உற்சவரை ஆத்ம சக்தியால் நானே தூய்மை செய்து தருகிறேன் என்றார்.

நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த பண்டித ரான சாம்பையரின் வார்த்தைகளை அப்படியே ஏற்று மகிழ்ந்த ஆலய நிர்வாகிகளும், பக்தர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தனர்.

தனி அறையில், உற்சவ விக்ரகம் வைக்கப் பட்டு, திரை போட்டு மறைக்கப்பட்டது.

வடிவேலனின் முன் அமர்ந்து, வேத மந்திரங்களைச் சொல்லி, ஆத்ம சக்தியால் உற்சவரின் திருமேனி மீது இருந்த பிசிறுகளை நீக்கினார் சாம்பையர்.

திரை விலக்கி வெளியே வந்தார் சாம்பையர்.

பேராணந்த ஒளிபொருந்திய உற்சவ முருகரைக் கண்ட கூட்டம் மொத்தமும் பரவசத்தோடு,

"முத்துக்குமாரசுவாமிக்கு அரோஹரா"

"முத்துக் குமாரசுவாமிக்கு அரோஹரா" எனக் கூறினார்கள்.

இன்றுவரை இத்தலத்து முருகனின் சிறப்பு அளவிற்கரியதாக உள்ளது, பொதுவாக முருகனை வணிகம், வியாபாரம், போன்றவற்றையும், புதிதாக தொழில் துவங்கும்போதும் முருகனை தரிசித்து தொழில் துவங்கினால் சிறப்பாக அமையும் என்று கூறுவார்கள்.

இதை மெய்ப்பிக்கும் வகையில், இந்த முருகன் கோவில் அமைந்துள்ள பகுதி முழுவதும் மிகப்பெரிய வியாபார மையமாகவே செயல்படுகிறது.

இந்தப் பகுதி தமிழகத்தின் மிக முக்கிய பகுதியாகவும் திகழ்வதிலிருந்து முருகனின் சக்தியை எளிதாக அறிந்து கொள்ள முடியும். இத்தலத்திற்கு வரும்போது வாகன நிறுத்தத்திற்கு மிகுந்த சிரம் ஏற்படுவதால் 2 முதல் 3 கிலோ மீட்டர் தொலைவில் வாகனங்களை நிறுத்தி நடந்து வந்து தரிசிக்கவேண்டிய அளவிற்கு இப்பகுதியை முருகன்மிகச் செழிப்பான வணிக மையமாக மாற்றி அருளியுள்ளதாக முருக பக்தர்கள் கூறுகின்றனர்.

தற்போது தைமாதப் பிறப்பில் இத்தல முருகனை வழிபட்டால் மிகச் சிறந்த பலன்கள் கிடைக்கும். தை 18ம் நாள் பிரதான திருவிழா, நடைபெறுகிறது. கந்தசஷ்டி, வைகாசி வசந்த உற்சவம், ஆடிக் கிருத்திகை, பங்குனி உத்திரம். போன்றவை மிகச் சிறப்பாக இத்தலத்தில் கொண்டாடப்படுகிறது.

மூலவரைப் போன்றே உற்சவருக்கும் தனி கொடிமரம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வணங்கப் படுகிறார். காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இத்தலத்து முருகனை தரிசிக்கலாம்.



www.aanmeegamalar.com

# கால்களை குறுக்கே மடித்து உட்கார்ந்து நாமஜபம் செய்ய வேண்டுமா?



ஒருமுகப்பட்ட மனதுடன் தொடர்ந்து நாமஜபம் செய்ய வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். இதை மனதில் கொண்டு கால் களை குறுக்கே மடித்து உட் கார்ந்த நிலையிலோ நின்று கொண்டோ அல்லது நடந்து கொண்டிருக்கும்போதோ நாமஜபம் செய்ய லாம். உதாரணமாக ரயிலில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் போதோ, சமையலில்ஈடுபட்டுக் கொண்டிருக் கும்போதோ, தொலைகாட்சியை பார்த்துக் கொண்டிருக்கும் போதோ அல்லது ஓய்வாக படுத்த நிலையிலோ கூட நாமஜபம் செய்யலாம்.

நாம் உட்கார்ந்து நாமஜபம் செய்யும்போது சௌகரியமாக உணர வேண்டும். அவ்வாறு நாம் சௌகரியமான நிலையில் இல்லாவிட்டால் நம் மனம் சிதறக் கூடும். அதனால் ஒருமுகப்பட்ட மனதுடன் செய்யும் நாமஜபத்தின் பயன் கிடைக்காமல் போய்விடும்.

கால்களை குறுக்கே மடித்து உட்கார்ந்து நாமஜபம் செய்வதால் அதிகபட்ச அளவு பயன் நமக்குக் கிடைக்கும் என்பது ஏற்புடையதாக இருக்கும். காரணம் என்னவென்றால் இந்த நிலையில் உட்கார்ந்து நாமஜபம் செய்வதால் உண்டாகும் ஆன்மீக சக்தி நமது உடலுக்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கும். படுத்துக் கொண்டிருப்பது போன்ற மற்ற நிலைகளில் செய்யும் நாமஜபத்தினால் இந்த சக்தி சூழ்நிலையில் கலந்து விடும் வாய்ப்பு உள்ளது. பரிசோதனையாக, மற்ற நிலைகளில் செய்யும் நாமஜபத்திற்கும் கால்களை குறுக்கே மடித்து உட்கார்ந்து செய்யும் நாமஜபத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நீங்களே செய்து பார்த்து உணர முயற்சிக்கலாம்.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626


www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# ஆன்மீக வழியில் அமைதி

மனிதனுடைய மனதில் தோன்றும் குறுகிய எண்ணங்களை ஒழிப்பதற்கு ஆன்மிகம் பல எளிய வழிமுறைகளைக் காட்டுகிறது. மண் மீது கொண்ட ஆசையே பாரதப்போர் நிகழ்ந்தது. பெண் மீது கொண்ட ஆசையினால் இராவணன் ராமபாணம் பட்டு அழிந்தான். மண் ஆசை பெண் ஆசையின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளை மகாபாரதம் இராமாயணம் என்ற இந்த இரு இதிகாசங்களும் நன்கு எடுத்துக் கூறியுள்ளன. நமது மனம் தூய்மையடையாமல் மனிதனுக்கு வாழ்வில் அமைதி கிடைக்காது. காமம் கோபம் பேராசை போன்றவற்றை ஆன்மீகவழியில் சென்று வென்றால்தான் வாழ்வின் அமைதி என்பது கிடைக்கும், இறைவன் அருள் கிடைக்கும் என்று ஸ்ரீஇராமகிருஷ்ணர் பக்தர்களுக்கு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நல்ல எண்ணங்கள், தைரியமூட்டும் நல்ல சிந்தனைகள், உற்சாகமூட்டக்கூடிய மனநிலையை நாம் பழகி வரும்போது, நாளடைவில் நம் மனதில் இருக்கும் வேண்டாத குப்பை விஷயங்கள் , மனச்சோர்வுகள், பலவீனங்கள் நம்மை விட்டு வெளியேறி விடும். அதனால் தூய மனதினை பெற்று, நமக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகும். மனிதர்கள் உலகில் காணப்படும் இன்பங்களில் ஆசை கொள்ளாமல், மனம், வாக்கு, செயல் மூன்றிலும் ஆன்மீக வழியில் தூய்மையினைக் கடைப்பிடித்து வரவேண்டும். அதனால் நமது மனதை தூய எண்ணங்களில் நிலைநிறுத்தி, ஆன்மீகவழியில் செலுத்தினாலே மனிதன் விரும்பும் தேடும் அமைதி கிடைக்கும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பொருள்களும் மனிதனுடைய இலட்சியமாக இருக்க வேண்டும் என்று சாஸ்திரம் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த நான்கு பொருள்களிலிருந்தும் நாம் எந்த ஒன்றை மட்டும் எதிர்பார்க்கிறோம் அல்லது விரும்புகிறோம் என்று நம்முடைய மனதினைக் கேட்டால், சிந்தித்து பார்த்தால் இன்பத்தைத்தான் (ஆனந்தம் மகிழ்ச்சி சுகம்) நாம் பெரிதும் எதிர்பார்க்கிறோம் என்று அறிந்து கொள்ளலாம். நாம் அறத்தின் வழியே சென்று தானதர்மங்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கிறோம் அல்லது விரும்புகிறோம்.

அதன்மூலம் நமக்கு ஒருவிதமான ஆனந்தமயமான மகிழ்ச்சி கிடைக்கிறது. மனிதன் கோவில்குளங்களுக்கு செல்கிறான். கோவில் வாசலில் சந்நியாசிகளும் பிச்சைக் காரர்களும் மற்றும் மாற்றுத்திறனாளிகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தன்னால் இயன்ற அளவில் பணமோ, பசியாறுவதற்கு உண்ண உணவுப் பொருள்களோ தானமாக கொடுக்கிறான். இதற்கெல்லாம் காரணம் அவர்களின் மீது உள்ள அன்பினாலோ பாசத்தினாலோ இரக்கத்தினால் அல்ல. பிறகு எதற்காக மனிதர்கள் தானதர்மங்கள் செய்வதற்கு விரும்புகிறான்.

ஏழை எளிய மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மீது இரக்கப்பட்டு முழுமனதோடு பெரும்பாலான மனிதர்கள் சுயநலமின்றி உதவி செய்வதில்லை. அவர்களுக்கு தாங்கள் உதவி செய்வதன் மூலம் அல்லது பசியை அகற்றுவதன் மூலம் தங்களுக்கு புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் செய்கிறான். தானதர்மங்கள் செய்வதன்மூலம் இன்பமாக தானும் தன்னோட குடும்பமும் சுகமாக வாழலாம் என்று நினைக்கிறான். இதுதான் எதார்த்தமான உண்மை நிலையாகும். இதனை மனசாட்சி யுள்ள மனிதன் யாரும் மறுக்க மாட்டான். இதனை ஒரு சுயநலம் என்றுகூட கூறலாம். அப்படி அவன் தானதர்மங்கள் செய்யும் கஷ்டப்படுகிறான் என்று வைத்துக் கொள்ளவோம்.

மனிதர்களில் சிலர் 'நான் கோவில் குளங்களுக்கெல்லாம் சென்று இவ்வளவு தானதர்மங்கள் செய்தும் நான் கஷ்டப்படுகிறேனே' என்று அல்லும்பகலும் கவலைப்படுவதற்கு ஆரம்பித்து விடுவான் அல்லது மற்றவர்களிடம் புலம்புவதற்கு ஆரம்பித்து விடுவார்கள். அதனால் அவன் மனஅமைதியை இழப்பதோடு, அவன் செய்த தானதர்மங்களின் மூலம் வரக்கூடிய இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அவனையும் அறியாமல் இழந்து விடுகிறான். எனவே மனிதர்கள் ஏழை எளியவர்கள் மாற்றுத்திறனாளிகள் மீது இரக்கப்பட்டு எவ் வித பிரதிபலன்கள் கருதாது அவன் தானதர்மங்களை செய்து வரவேண்டும். அவ்வாறு தானதர்மங்கள் செய்யும் அவனுக்கு ஏதாவது கஷ்டங்கள் வந்தால்கூட தான் செய்துவிட்ட முன்வினை கர்மபலன்கள்தான் காரணம் என்று மனதினை தனக்குத்தானே தேற்றிக்கொண்டு மனபக்குவம் அடைந்து மனஅமைதி கொள்வான். மேலும் அவன் தனக்கு வரும் கஷ்டங்களையெல்லாம் மனதில் எளிதாக எடுத்துக்கொண்டு எண்ணிக்கொண்டு அவன் மன அமைதி கொள்வான்.

மனிதர்கள் இப்படித் தானதர்மங்கள் செய்யும் அவனது ஊழ்வினைப்பயன் காரணமாகத் அவன் தாங்கமுடியாத துன்பங்களை




ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அடைய நேரிட்டால், அவன் 'நான் கோவிலுக்குப் போய் எவ்வளவு தானதர்மங்கள் செய்திருக்கிறேன். எனக்கு ஏன் இத்தகைய துன்பங்கள் வந்து விட்டதே' என்று மற்றவர்களிடம் தன்மனதில் உள்ளதை அவனையறியாமல் கூறிப் புலம்புவான். இதிலிருந்து அவன் தான தர்மங்கள் செய்வது தனக்கும் தன்னோட குடும்பமும் சுகமாக இருக்க வேண்டும் என்ற சுயநல எண்ணம்தான் என்று புரிகிறதல்லவா? சுயநலமின்றி பிரதி பலனை எதிர்பாராமல் தானதர்மங்கள் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போது வாழ்வில் அவன் விரும்பும் தேடும் அமைதி கிடைக்கும். அதன் மூலம் அவனையும் அறியாமல் ஒருவிதமான இன்ப அனுபவத்தையும் பெறலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகிறது.

சாலைகளில் பொது இடங்களில் உள்ள பழமரங்கள் நமக்கு சுவைமிக்க கனிகளைக் கொடுக்கிறது. மேலும் அவைகள் வெயில்காலத்தில் நிழல் தந்து நமக்கு உதவுகிறது. சூரியன் சந்திரன் விண்மீன்கள் எல்லாம் நமக்கு ஒளியை கொடுக்கிறது. வான்மேகங்கள் மழை பொழிந்து நமக்கு குடிநீரைத் தருகிறது. சுகமான காற்று வீசி நமக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. மனிதர்களுக்கும் உலகில் வாழும் மற்ற உயிரினங்களுக்கும் இவ்வாறு காற்று, மழை, சூரியன், சந்திரன் போன்ற இயற்கையெல்லாம் எந்தவிதமான பிரதிபலன்களுமின்றி உதவி செய்து கொண்டிருப்பதை நாம் கண்களால் பார்த்தும் உணர்ந்து கொண்டுதான் இருக்கிறோம். இயற்கையைப்போன்றுதான் நாம் தானதர்மங்களை செய்யும்போது எவ்வித பிரதிபலன்களையும் எதிர்பார்க்காமல் செய்து வரவேண்டும் என்று ஆன்மிகம் கூறுகிறது. அவ்வாறு பிரதிபலன்களை எதிர்பாராமல் செய்யக்கூடிய தானதர்மங்களில் நம்மையும் அறியாமல் ஒரு மகிழ்ச்சி கிடைக்கிறது. மேலும் அதுபற்றி எந்தவிதமான கவலையும் மனம் எண்ணுவதில்லை. இதனை 'கடமையைச் செய் பலனைப்பற்றி எதிர்பாராதே' என்று கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையின் மூலம் நமக்கு வலியுறுத்தி கூறியுள்ளார்.

உலகில் உள்ள அனைத்துப் பொருள்களின்மூலம் நாம் நாடுவது சுகம் மகிழ்ச்சி ஆனந்தம். நாம் உலகில் விரும்பி நாடும்பொருள்களை அதன் தன்மைகளை வைத்துப் பிரித்துப் பார்க்கும்போது, நமது வாழ்க்கைக்குத் தேவையானபொருள்கள், நமது வாழ்க்கைக்கு பாதுகாப்புக்குத் தேவையான பொருள்கள், போகப்பொருள்கள் என்று வகைப்படுத்தலாம். இவற்றையெல்லாம் நாம் ஏன் நாடுகின்றோம் என்றால், அவைகள் மூலம் நமக்கு இனம்புரியாத ஆனந்தம் கிடைக்கிறது. உண்ண உணவு, உடுத்த ஆடை, குடியிருக்க இருப்பிடம் இவையெல்லாம் நமது வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் ஆகும். இந்தப் பொருள்களை அடைவதன் மூலம் நாம் ஓரளவு மகிழ்ச்சி அடைகிறோம்.

பாதுகாப்பான வீடு, பாதுகாப்பானஉணவு, பாதுகாப்பான தண்ணீர், நம்மை விலங்குகள் மற்றும் விஷ ஜந்துக்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு உரிய வில் அம்பு, ஈட்டி போன்ற ஆயுதங்கள் இவைகள் தான் நமது வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய பாதுகாப்பான பொருள்கள் என்று கூறலாம். மேலும் தற்காலத்தில் வசதி படைத்தவர்கள் எதிரிகளிடமிருந்து தங்களை பாதுகாப்பதற்கு பயன்படுத்தக்கூடிய கைத்துப்பாக்கிகள், மற்றும் நவீனஆயுதங்களும் பாதுகாப்புப்பொருள்கள் ஆகும்.

மாடமாளிகை, அறுசுவையுடன்கூடிய உயர்தரமான உணவுபொருட்கள், விலைஉயர்ந்த பட்டாடைகள், வண்ணவண்ண ஆடம்பரஉடைகள், மது வகைகள் லாகிரி வஸ்துக் கள் இவையெல்லாம் உலகில் காணப்படும் போகப் பொருள்கள் ஆகும். தற்காலத்தில் நாம் பயன்படுத்தும் தொலைக்காட்சிப்பெட்டிகள், மிக்சி, கிரைண்டர், வாசிங் மிஷின், மின்விசிறி மற்றும் மின்சாதனப்பொருட்கள் இவை அனைத்தும் போகப்பொருட்கள் என்றும் கூறலாம். இவற்றினை பயன்படுத்துவதன் மூலமாக நாம் சுகம் கண்டு இன்பமுடன் வாழுகிறோம். போகப்பொருள்கள் மூலம் ஒருவிதமானஆனந்தம் கொள்கிறோம். ஆனால் இத்தகைய போகப்பொருட்களை நாம் பயன்படுத்துவதால் நம்மையும் அறியாமல் ஆரோக்கியமான வாழ்வை இழந்து கொண்டு வருகிறோம் என்பது யாருக்கும் தெரிவதில்லை. நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நமது உடல் உழைப்பு குறைந்து விடுகிறது..

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
Tahsildar (Retd) கைபேசி: 9894043308



# முருகனும் பலன்களும்




## சரவணபவ என்றால் கிடைக்கும் ஆறு பலன்கள்

"சரவணபவ' என்னும் ஆறெழுத்து மந்திரம் மிகவும் சிறப்பானதாகும். இதனை மனமுருகி சொல்பவர்கள் செல்வம், கல்வி, முக்தி (பிறப்பற்ற நிலை), எதிரிகளை வெல்லுதல், ஆரோக்கியம், பயமின்றி இருத்தல் ஆகிய ஆறு பேறுகளையும் பெற்று மகிழ்வார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.

## முருகனும், வேங்கை மரமும்...

முருகன் கோவில்களில் பெரும்பாலும் வேங்கைமரம் தலவிருட்சமாக இருக்கும். முருகன் வள்ளி திருமணத்தில் வேங்க மரம் முக்கிய இடம் பெறுகிறது. இம்மரம் தனிச்சிறப்பு உடையது. தெய்வீக அருள்பெற்ற மரம்.

முருகனருள் பெற்ற மரமல்லவாப இம்மரத் துண்டுகளை நீரில் நனைய வைத்து அந்நீரை வெயிலில் காயவைத்து வெற்றிக்கு இடும் பொட்டு (திலகம்) செய்து வந்தார்கள் என்ற குறிப்பும் உண்டு. இது கெடுதல் விளைவிக்காது. இந்த நீரை குடித்தால் வலிமையான நோயற்ற உடல்நலம் உருவாகும். இம்மரம் பாதுகாப்பு கவசம் போன்றது.

## அறுபடை வீடுகளில் முருகனின் வடிவும், தன்மைகளும்...

| | | |
|---|---|---|
| திருப்பரங்குன்றம் | நல்துணைவடிவு | உல்லாசம் |
| திருச்செந்தூர் | ஒளிவடிவு | மறுபிறப்பு இன்மை |
| பழனி | பழம் (திருவடிவு) | யோகம் |
| சுவாமிமலை | சொல்வடிவு | இவ்வுலக சுகம் |
| திருத்தணி | கலசநீர் வடிவு | சல்லாபம் |
| பழமுதிர்ச்சோலை | மர வடிவு | விநோதம் |

## ஆறுபடை முருகனை தரிசிப்பதன் பயன்

1. திருப்பரங்குன்றம்:

இங்கு பரம்பொருளை வழிபட்டால் திருமணம் நடைபெறும்.

2. திருச்சரலைவாய் (திருச்செந்தூர்):

இங்கு முருகப்பெருமானை கடலில் நீராடிபின் வழிபடுதல் நல்லது. தீராத பகை,தீராத வியாதி ஆகியன நீங்கும். மனம் தெளிவு பெறும்.

3. திரு ஆவினன்குடி (பழனி):

ஞானப்பழமாக இருக்கின்ற முருகப்பெருமானை (பழனிட ஆண்டவரை) வழிபட்டால் தெளிந்த ஞானம் கிடைக்கும்.

4. சுவாமிமலை (திருஏரகம்):

தந்தைக்கு உபதேசம் செய்த முருகப் பெருமானை இங்கு வழிபட்டால் ஞானம், சுகவாழ்வு, மகிழ்வு ஆகியன பெறலாம்.

5. திருத்தணிகை (குன்று தோராடல்):

குன்றிலே குடியிருக்கின்ற திருத்தணிகை (செருத்தணி முருகன்) முருகனை வழிபட்டால் மனதிலிருக்கும் கோபம் (சினம்) முழுமையாக நீங்கும்.

6. பழமுதிர்ச்சோலை:

இங்குள்ள முருகனை வழிபட்டால் பொன், பொருள், வருமானம் பெருகும். அங்குள்ள சுனை (சிறு அருவி)யில் நீராடுதல் மிகவும் சிறப்பு.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 09444228203.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

aanmeegamalar mail book (BI MONTHLY) R.Dis No:1068/2020

# ஆன்மிகமலர்.காம்

## இணையதளத்தின் சார்பில் வெளிவரும்

**ஆன்மிகமலர் மெயில்புக்**

**வாசகர்களுக்காக துவக்கப்பட்ட**

ஆன்மிகமலர்

YouTube சேனலை

LIKE & SHARE

செய்து




**தொடர்ந்து நமது YouTube சேனலுக்கு ஆதரவு தாருங்கள்**